வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 23.09.2021 வியாழக்கிழமை | இதழ் : 292 | பக்கங்கள் : 16




## ஜனாதிபதியின் ஐ.நா. உரை வெற்று பேச்சு மட்டுமே

### சபையில் கஜேந்திரகுமார்



கொழும்பு, செப். 23

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பல எண்ணிக்கையிலான தமிழ் புலம்பெயர் அமைப்புகளை தடை செய்துவிட்டு, தற்போது உள்ளக பொறிமுறையில் பிரச்னை

15

## கூட்டமைப்புடன் பேச மறுக்கும் ஜனாதிபதி புலம்பெயர் தமிழரை அழைப்பது வேடிக்கை

### பாராளுமன்றத்தில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

இலங்கையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச மறுக்கும் ஜனாதிபதி, நியூயோர்க்கில் இருந்து கொண்டு புலம்பெயர் தமிழர்களை பேச அழைப்பது வேடிக்கையானது என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான

15



# பொறுப்புக்கூறல், நீதி, நல்லிணக்கம் தேசிய நிறுவனங்களூடே சாத்தியம்!

## ஐ.நாவில் ஜனாதிபதி கோட்டாபய உரை

நியூயோர்க், செப்ரெம்பர் 23

பயங்கரவாதம், அது சார்ந்த வன்செயல்கள் இலங்கையில் மீண்டும் நிகழாது என்பதை உறுதி செய்வதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. அவற்றின் பின்னாலுள்ள அடிப்படைப் பிரச்னைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். நீடித்த சமாதானத்தை நாட்டுக்குள் ஏற்படுத்திக்கொள்ள, தேசிய நிறுவனங்களினூடான பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

15



## மது அருந்தும் போட்டியால் பறிபோனது வாலிபர் உயிர்!

தென்மராட்சி, செப். 23

போத்தலில் இருந்து வாயெடுக்காமல் அதிக மதுபானம் அருந்தும் போட்டியால் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தென்மராட்சி பகுதியில் இடம் பெற்றுள்ளது.

15

## நாகர்கோவில் ம. வி. படுகொலை; 26ஆவது நினைவேந்தல் நேற்று!

வடமராட்சி, செப். 23

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் மகா வித்தியாலயம் மீது இலங்கை விமானப் படை நடத்திய குண்டுவீச்சில் கொல்லப்பட்ட 21 மாணவர்கள் உள்ளிட்ட 39 பேரின் 26ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்னெடுக்கப் பட்டது.

15

## காணாமற்போனோர் தொடர்பில் எதனையும் மறைப்பதற்கில்லை

### டலஸ் அழகப்பெரும கூறுகிறார்

கொழும்பு, செப். 23

காணாமற்போனவர்கள் தொடர்பாக எதனையும் மறைப்பதற்கில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக

02

## கொரோனா தொற்றினால் மேலும் 92 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 23

இலங்கையில் மேலும் 92 கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நேற்று முன் தினம் கோவிட் தொற்றால் 92 பேர் உயி

15

## ரூ. 40,000 கோடி கடன்பெற அரசாங்கத்துக்கு அனுமதி!

கொழும்பு, செப். 23

அரசாங்கம் மேலும் 40 ஆயிரம் கோடி ரூபாயை கடனாகப் பெறுவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதனால், நாட்டின் மொத்த கடன் பெறும் எல்லையை 3 இலட்

15

## வடக்கில் நேற்று 62 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், செப். 23

வவுனியா மாவட்டத்தில் 33 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 62 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனை, யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடங்களின் முடிவுகளின் அடிப்படையிலேயே இந்தத் தொற்றாளர்கள் இனங்காணப் பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு

15

## வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வீசா அனுமதி காலம் 5 வருடமாக நீடிப்பு

கொழும்பு, செப். 23

வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் வீசா அனுமதிக் காலத்தை 5 வருடங்கள் வரை அதிகரிப்பது உள்ளிட்ட விடயங்களை இலக்காகக் கொண்டு முன் வைக்கப்பட்டுள்ள குடிவரவு குடியகல்வு (திருத்தச்) சட்டமூலம் நேற்று புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதற்கமைய குறித்த

15



## இப்படியும் நடக்கிறது...!

ஒரு தடவை பாரிஸில் இருந்து மூத்த போராளி ஒருவர் தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

தாயக அரசியல் நிலைமைகள் குறித்து நீண்ட நேரம் உரையாடிய அவர், தற்போதைய தலைவர்கள் மீதான எனது வெறுப்புணர்வை புரிந்துகொண்டதால், "சரி அப்ப இருக்கிற தலைவர்களில் நேர்மையானவர் என்று நீங்கள் யாரைக் கருதுகிறீர்கள்", என்று கேட்டார்.

நான் படக்கென்று சொன்னேன். "என்னைப் பொறுத்தவரையில் எதனையும் நேர்மையாக கதைக்கின்ற தலைவர் என்றால் அது சித்தர்தான்", என்றேன்.

அவருக்கு ஆச்சரியம். திரும்பவும் கேட்டார் "நீங்கள் எனக்காக சொல்கிறீர்களோ அல்லது உண்மையாகவே சொல்கிறீர்களா?", என்று.

நான் திரும்பவும் சொன்னேன், "அவர் இருக்கின்ற கட்சியைப்பற்றி சொல்லவில்லை. தர்மலிங்கத்தின் மகன் சித்தார்த்தனை சொல்கிறேன்", என்று.

என்னோடு அவ்வளவு நேரமும் பேசிக்கொண்டிருந்த அந்த நண்பரும் மிகச்சிறிய வயதிலேயே புளொட் ஆயுத இயக்கத்தில் சேர்ந்தியங்கி தனது வாழ்க்கையை சிதைத்தவர்களில் ஒருவர்தான்.

அவருக்கு சிலவேளைகளில் எனது கருத்து மகிழ்ச்சியைத் தந்திருக்கலாம்.

சித்தர் யாருடனும் பகைத்து, அல்லது கடிந்து பேசி நான் கண்டதில்லை. எதையும் வெளிப்படையாக சொல்லுவார். யாரையும் நோகப் பண்ணவும் மாட்டார்.

அவர் கூட்டமைப்பில் இணைந்து முதன்முதலில் தேர்தலில் போட்டியிட்டது மாகாணசபைத் தேர்தலில். யாரும் எதிர்பாராத வகையில் மிக அதிக விருப்பு வாக்கு பெற்றவர்களில் அவர் ஒருவர்.

அந்தத் தேர்தல் பிரச்சார காலத்தில் ஒருநாள் சுன்னாகத்திலுள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்கு தனிப்பட்ட அலுவல் காரணமாக சென்றுவிட்டு வெளியே வரும்போது ஒரு வயதானவர் சைக்கிளில், தேர்தல் பிரசார துண்டுப்பிரசுரங்களுடன் என்னை வழிமறித்தார்.

வாங்கிப் பாத்தால் அது சித்தருக்கு வாக்குக் கேட்கும் பிரசுரம். அந்த ஐயாவுக்கு எழுபது வயதிருக்கும். "ஐயா சித்தருக்காக இந்த வயதிலும் பிரசாரம் செய்கிறீர்களே?", என்றேன்.

"இல்லைத்தம்பி, அவருக்காக இல்லை. அவர் தந்தைக்காக நான் இதையெண்டாலும் செய்ய வேணும் எண்டு தோணிச்சுது...", என்றார்.

அந்தக் காட்சி இப்போதும் என் மனதில் நிற்கின்றது.

அது சரி, எதற்காக சித்தார்த்தன் பற்றி இவ்வளவு நீண்ட விளக்கம் என்று நீங்கள் கருதலாம்.

எப்போதும் யார் மனதையும் புண்படுத்தாத அந்த மனிதரே சற்றுக் கடுமையாக மற்றவர் மீது விமர்சனம் வைக்கிறார் என்றால் அதில் நிச்சயம் நியாயம் இருக்கவே செய்யும்.

கோப்பாய் கதிரவேற்பிள்ளை ஐயா மரணிப்பதற்கு சில வாரங்களுக்கு முன்னதாக அவரை சந்தித்தபோது, அவர் சொன்னது இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

இயக்கங்கள் பல தோன்றி ஆள்ஆளுக்கு மின்கம்ப மரணதண்டனைகள் வழங்கத் தொடங்கியிருந்த காலம். கொலைகளை வெறுக்கின்ற ஒருவர், இவனுக்கு மரணதண்டனைதான் தீர்ப்பு என்று சொன்னால் அதில் நியாயம் இருக்கும். ஆனால், கொலை செய்கின்றவனே இவரைக் கொல்லவேணும் என்று தீர்ப்புக் கொடுத்தால் அது சரியான தீர்ப்பாக இருக்குமா என்பது சந்தேகமே என்று அவர் கூறியது இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

அதுபோல எப்போதும் எல்லோரோடும் கடும்சொல் பாவிக்காத சித்தார்த்தனே கோபப்பட்டிருக்கிறார் என்றால் அவரின் கோபத்தில் நியாயம் இருக்கவே செய்யும்.

தன்னைக் கோபப்படுத்த சிலர் முயன்றுவருவது அரச நிகழ்ச்சி நிரல் என்று அவர் குற்றம்சாட்டியிருப்பதும் அதற்கு வேறு வகையில் பதிலளித்திருப்பதையும் காண முடிகின்றது. அதுபற்றி நாளை பார்ப்போம்.!

**- ஊர்க்குருவி**

# கொரோனாவால் வடக்கில் மூவர் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 23

கொரோனா தொற்றால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருவரும், வவுனியாவில் ஒருவருமாக வடக்கு மாகாணத்தில் நேற்று மூவர் உயிரிழந்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே உயிரிழந்த நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த கந்தசாமி தவமணிதேவி (வயது 64), யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த செல்லையா இலங்கநாதன் (வயது 75) ஆகியோர் உயிரிழந்தனர்.

இதேபோன்று வவுனியா பொது மருத்துவமனையால் மாதிரி அனுப்பப்பட்ட மேரி யோசப்பின் பி. மரியநாயகம் (வயது 85) என்பவரும் உயிரிழந்தார். (ஐ)

## காணாமற்...

ஒன்றிணைந்த செயல்பாடுகளே அவசியம் என்றும் இலங்கையர் என்ற ரீதியில் இவ்வாறான துர்ப் பாக்கிய சம்பவம் மீண்டும் ஏற்படாத வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதே இறுதியான பதிலாகும் என்றும் அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர்களுடனான சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்தார்.

மோதல் இடம்பெற்ற காலப் பகுதியில் காணாமற்போனவர்களுக்கு விரைவாக மரணச்சான்றிதழ் வழங்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால் காணாமல் போனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்கின் றனர். உண்மையிலேயே இவர்களுக்கு என்ன நடந்தது என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் - காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை என்னால் திட்ட வட்டமாக கூறமுடியாது. இதனைக் கண்டறிவதற்காக இலங்கையில் அலு வலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி வெளிநாடுகளிலுள்ள புலம் பெயர் அமைப்புகளுக்கு - நாட்டை நேசிப்பவர்களுக்கு பகிரங்க அழைப் பொன்றை விடுத்தார். அதாவது நாம் ஒன்றிணைந்து இதுகுறித்து பேச்சு நடத்து வோம். தீர்மானங்களை மேற்கொள்வோம் இவர்கள் எமது நாட்டு பிரஜைகள் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொலைநோக்குடனான சாதக மான நிலைப்பாடாகும். வடக்கை பிரதிநிதித்துவம் செய்யும் எமது சகோதர உறுப்பினர்கள் இது குறித்து சாதகமாக கருத்து தெரிவித்தனர். திட்டவட்டமாக உதாரணத்திற்கு எக்ஸ் என்ற நபர் காணாமற்போனார் என்று வைத்துக்கொள்வோம். இவருக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு பதிலளிக்கக்கூடிய அளவுக்கு எமக்கு தெளிவில்லை.

இதனை எந்தவகையிலும் மறைக்கக் கூடிய விடயமல்ல. எந்தச் சந்தர்ப்பத்தி லாவது சரியான தகவல் வெளிப்பட லாம். நாம் அதனை அறிந்துகொள்ள முடியும். சில சந்தர்ப்பத்தில் காணாமற் போனவர்கள் சிலர் வெளிநாடுகளில் அரசியல் புகலிடம்பெற்று வாழ்கின்றனர். இது அனைத்து சந்தர்ப்பங்களிலும் அல்ல-என்றார்.

### கல்வி TV CHANNEL-1

**23.01.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2

**23.01.2021**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
23.09.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தென்னிலங்கை அரசியலில் மாற்றமா?

ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சியில் பெரியளவில் பங்களித்த முக்கிய அரசியல் பிரமுகர்களின் குரலை, இப்போதெல்லாம் அதிகம் கேட்க முடிவதில்லை. ராஜபக்ஷக்களின் வெற்றியில், குறிப்பாக விமல் வீரவன்ச போன்றவர்களின் பங்களிப்பு முதன்மையானது. ராஜபக்ஷக்களின் தேர்தல் மேடைகளில் விமல் வீரவன்ச ஒரு வெண்கல குரலோனாகவே இருந்தார். ஆனால், அண்மைக் காலமாக விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்றவர்கள் அரசியலில் இருக்கிறார்களா என்று கேட்குமளவுக்கு, அவர்களைக் காணமுடிவதில்லை.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொது ஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்திருக்கின்றனர். மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திர கட்சியும் அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருக்கிறது. இந்த நிலையில் பங்காளிக் கட்சிகள் சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைமையில் தங்களை பலப்படுத்திக் கொள்வதான ஒரு தோற்றம் தெரிகின்றது. பொதுஜன பெரமுனவிற்கும் பங்காளிக் கட்சிகளுக்குமிடையில் நல்ல உறவில்லை. ஏற்கனவே, இது பொதுவெளிகளில் விவாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் எதிர்காலத்தில் தங்களை தனித்துவமாகப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் அவர்களுக்குள் இருப்பதாகத் தெரிகிறது. இந்த அடிப்படையில்தான் பாரம்பரிய கட்சியான சிறீலங்கா சுதந்திர கட்சியுடன் தங்களை ஒன்றிணைத்து வருகின்றனர். பொதுஜன பெரமுனவில் அங்கம் வகிக்கும் அனைத்து பங்காளிக் கட்சிகளுமே, சிறீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்திருந்த கட்சிகள்தான்.

மஹிந்த ராஜபக்ஷ அனைத்தையும் தீர்மானிப்பவராக இருந்த காலத்தில் இவர்கள் மத்தியில் பெரியளவில் பிரச்னைகள் இருந்திருக்கவில்லை. பிரச்னைகள் எழுந்தாலும் அதனை மஹிந்த சுமூகமாக முடித்துவிடுவார். ஆனால், இப்போது பொதுஜன பெரமுனவின் தீர்மானங்கள் பெருமளவிற்கு பஸில் ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் இருப்பனவாகவே நோக்கப்படுகின்றது. பஸில் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசித்து, பொதுஜன பெரமுனவின் தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துவது தொடர்பில் பங்காளிக் கட்சிகள் மத்தியில் அதிருப்திகள் காணப்படுகின்றன. ஏற்கனவே, பஸிலுக்கும் விமல் வீரவன்ச போன்றவர்களுக்கும் இடையில் நல்லுறவில்லை. இதனை சில சந்தர்ப்பங்களில் நாசூக்காக விமல் வீசவன்ச அணியினர் வெளிப்படுத்தியுமிருக்கின்றனர்.

இந்த நிலையில் எதிர்கால தேர்தல்களின் போது, பங்காளிக் கட்சிகள் தனித்துவமாக தேர்தலை எதிர்கொள்ளவும் வாய்ப்புண்டு. அவ்வாறு அவர்கள் தேர்தலை எதிர்கொள்ள வேண்டுமாயின், அதற்கு பாரம்பரிய கட்சி ஒன்றின் அடையாளம் தேவை. தற்போதுள்ள நிலையில் சிறீலங்கா சுதந்திர கட்சி மூலம் தான் அதனை வழங்க முடியும். ஏனெனில், பொதுஜன பெரமுனவின் பங்காளிக் கட்சிகள் அனைத்துமே சிங்கள - பௌத்த தேசியவாதத்தை தேர்தல் முதலீடாகக் கொண்டிருக்கும் கட்சிகளாகும். எனவே, அவர்களால் இலகுவாக எதிரணியினருடன் கைகோக்க முடியாது. மேலும், எதிரணியில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இருக்கின்றன.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களால் முஸ்லிம்களுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்ள முடியாது. இந்த பின்புலத்தில் நோக்கினால், 'மொட்டு'க்கு அடுத்த நிலையில் சிங்கள - பௌத்த தேசியவாதத்துக்கு நெருக்கமாக இருக்கும் ஒரேயொரு கட்சியாக சிறீலங்கா சுதந்திர கட்சியே இருக்கின்றது. இதனை கருத்தில் கொண்டே அனைவரின் பார்வையும் மைத்திரிபால சிறிசேனவின் பக்கமாக திரும்பியிருக்கின்றது. மேலும், பொதுஜன பெரமுனவின் நிர்வாகத்தினால், மைத்திரிபால தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்பட்ட விமர்சனங்கள் அதிருப்திகள் பெருமளவு மறைந்துவிட்டன. இதனையும்விட மைத்திரி பரவாயில்லை என்னும் அபிப்பிராயமும் உண்டு. ஏனெனில், அந்தளவிற்கு நாடு பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. உள்ளாடைக்குக்கூட பஞ்சம் ஏற்பட்டிருக்கும் நிலையில், ராஜபக்ஷக்களின் ஆளுமை என்று சொல்லக்கூடிய ஒன்று இப்போதில்லை. இவற்றை பங்காளிக் கட்சிகள் கருத்தில் கொள்ளக்கூடும். ஏனெனில், எதிர்காலத்தில் ராஜபக்ஷக்களோடு இணைந்து தேர்தலை எதிர்கொள்வதை விடவும் தனித்துச் சென்றால் அது தங்களின் வெற்றிக்கு அதிகம் நல்லது என்றும்கூட பங்காளிகள் எண்ணக்கூடும். ஏனெனில், மொட்டு முன்னைய கவர்ச்சியோடு எதிர்காலத்தில் நோக்கப்படுமா என்பது ஒரு பெரிய கேள்வி. ஒருவேளை இந்த இடைப்பட்ட காலத்தில் ஏதும் நடந்தால் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

# கனடிய பாராளுமன்றில் இலங்கை தமிழ் அரசியல் வாரிசு !

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் வீ. ஆனந்தசங்கரியின் புதல்வர் ஹரி ஆனந்தசங்கரி (Garry Anadasangaree) கனடிய பாராளுமன்றத் தேர்தலில் லிபரல் கட்சி சார்பாக போட்டியிட்டு பாராளுமன்றுக்கு தெரிவாகியுள்ளார்.*



*சிறுவயதிலேயே கனடாவில் சென்று குயேறிய ஹரி ஆனந்தசங்கரி அங்கு ஒரு சட்டத்தரணியாக பணியாற்றி வருகிறார். அத்துடன், மனித உரிமைகள் செயல்பாட்டா ளராகவும், கனடாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களின் சட்டப் பிரச்னைகள் மற்றும் அவர்களின் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு துணை நிற்பவராகவும் ஹரி ஆனந்த சங்கரி இருந்து வருகின்றார். லிபரல் கட்சி சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூட (Justin Trudeau) கனடாவில் ஓர் அரசியல் வாரிசு என்பது குறிப்பிடத்தக்கது.*

*பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் தந்தை யார் பியரே ட்ரூடோவும் முன்பு கனடிய பிரதமராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இலங்கையிலிருந்து எண்பதுகளின் பின்னர் பல்லாயிரக்கணக்கில் வடக்கு - கிழக்கு மக்கள் மேற்கத்தேய நாடுகளுக்கு புலம்பெயர்ந்திருந்தனர். சுமார் இரண்டு இலட்சம் (200,000) இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்கள் கனடாவில் குடியுரிமை பெற்று வாழ்ந்து வருகின்றனர்.*

*கனடாவின் பொருளாதாரத்துக்கு இலங்கையின் வடக்கு தமிழர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகவே இருக்கின்றது. இது குறித்து கனேடிய மக்களே நன்றியுணர்வோடு குறிப்பிடுவதுண்டு. கனடா பாராளுமன்றுக்கு முன்னர், இலங்கையை பூர்வீகமாக கொண்ட ராதிகா சிற்சபேசன் என்ற பெண்மணியும் தெரிவாகியிருந்தார்.*

*ஹரி ஆனந்தசங்கரி 1980ஆம் ஆண்டு சிறு வயதில் தாயாருடன் அயர்லாந்து சென்றிருந்தார். பின்னர் அங்கிருந்து கனடா சென்று குடியேறி அங்கே மனித உரிமைகள் மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய துறைகளில் சட்டக் கல்வியைப் பயின்று சட்டத்தரணியானார்.*

*இதன்பின்னர், தமக்கென ஒரு சட்ட காரியாலயத்தை உருவாக்கி புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் குறிப்பிடத்தக்க சேவையை வழங்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*அரசியலில் ஆளும் லிபரல் கட்சி உறுப்பினராக பாராளுமன்றுக்கு தெரிவாகி கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் நெருங்கிய சகாவாக இருந்து கனடிய அரசியலில் பங்காற்றி வருகின்றார்.*

*கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்துவரும் ஹரி ஆனந்த சங்கரி, கனடாவில் இடம்பெறும் தமிழர்களின் பண்டிகைகள் அனைத்திலும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவையும் பங்குபற்ற வைத்து கனடாவில் வாழ்ந்துவரும் இலங்கை தமிழர்களுக்கும், தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகளுக்கும் பெருமை சேர்ப்பவராக ஹரி ஆனந்தசங்கரி விளங்குகின்றார்.*

*கனடாவில் தைப்பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை நிகழ்வுகளில் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மேற்கத்தேய உடையில் பங்குபற்றாது தமிழர்களின் பாரம்பரிய வேட்டி, சால்வை என்பவற்றோடு அவரை பங்குபற்ற வைத்து பெருமை சேர்ப்பவராகவும் ஹரி ஆனந்த சங்கரி விளங்குகின்றார்.*


*ஹரி ஆனந்தசங்கரியின் கனடா தேர்தல் தொகுதி ஸ்காபரோவாகும். பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் ஸ்காபரோவிலேயே வாழ்ந்து வருகின்றனர்.*

*ஐரோப்பாவில் இருப்பது போன்றே கனடாவிலும் ஏராளமான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் இருந்து வருகின்றனர். இருந்தபோதிலும் ஹரி ஆனந்தசங்கரி தமது அரசியல் நடவடிக்கைகளை பொறுத்தவரை மிக அவதானமாகவே நடந்து கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு கனேடிய அரசின் ஒரு பிரதிநிதியாகவே இருந்து குரல் கொடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் கனடாவுக்கு சன் சீ (Sun Sea) என்ற கப்பல் மூலமாக ஏராளமானவர்கள் கனடாவுக்குள் இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து சட்ட விரோதமான முறையில் தமக்கு புகலிடம் தேடி பிரவேசித்திருந்தனர். அச்சமயம் அவர்களின் சட்ட பிரச்னைகளை கையாண்டு கனடாவுக்குள் அடைக்கலம் வழங்க ஹரி ஆனந்த சங்கரி ஏற்பாடுகளை செய்திருந்தார்.*

*புலம்பெயர்ந்த நாடுகளில் எல்லாம் வடக்கு - கிழக்கு தமிழர்கள் கல்வி, பொருளாதாரம் என்பவற்றில் மேம்பட்டு அரசியலிலும் தனித்துவத்தோடு விளங்குவதையே ஹரி ஆனந்தசங்கரியின் கனேடிய பாராளுமன்ற தேர்தல் வெற்றி எடுத்தியம்புகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
வாகன பராமரிப்பு செலவு ஏற்படும். மன மகிழ்ச்சி உண்டு. உற்றார், உறவினர்கள் உங்களைப் பாராட்டும் சந்தர்ப்பம் வரும். நல்ல பணியில் சேர அழைப்புகள் வரும் நாள்.

**இடபம்**
உங்களது பணியில் நல்ல நண்பர்கள் உதவிக் கரம் நீட்டுவர். குடும்பத்தில் ஒருவருக்கு இருந்து வந்த சிரமம் அகலும். திட்டம் ஒன்றை செயல் படுத்த மாற்று இனத்தவர் உதவி செய்வர்.

**மிதுனம்**
பணவரவு திருப்தி தரும். இன்று முழுக்க பிஸியாக இருப்பீர்கள். நினைத்தது நிறைவேற சற்றுப் பாடுபட வேண்டியிருக்கும். பணவரவு உங்கள் முயற்சியால் நன்றாகவே இருக்கும்.

**கடகம்**
உங்களுக்கு நெருக்கடி தந்து கொண்டிருந்த பிரச்னை ஒன்று தீரும். மனதில் அமைதி நிலவும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். நண்பர்களுக்கு இடையே ஒற்றுமை அதிகரிக்கும்.

**சிம்மம்**
குடும்பத்தில் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் உறுதியாகும். யாரிடமும் தவறாகப் பேசி சிரமத்துக்குள்ளாக வேண்டாம். சகபணியாளருடன் முக்கியமான வேலை ஒன்றை முடிப்பீர்கள்.

**கன்னி**
முயற்சி செய்வோருக்கு நல்ல வேலை கிடைக்கும். நீங்கள் மதிப்போரின் பாராட்டுதல்கள் கிடைத்து மனம் மகிழும். சொந்த வீடு வாங்கும் கனவு நனவாகும். பயம் நீங்கும்.

**துலாம்**
பல நாளாக இருந்து வந்த இக்கட்டான சூழ்நிலை விலகும். தொழில் மீண்டும் வளர்ச்சிப் பாதைக்கு திரும்பும். மகிழ்ச்சி கூடும். வாழ்வில் முன்னேறுவதற்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
யாருடனும் சண்டை சச்சரவுகள் வேண்டாம். சரும நோய் தீரும். சகபணியாளரின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். பணிச்சுமை குறையும் தொழில் சிறக்க புதிய தொழில்நுட்ப கருவிகள் வாங்குவீர்கள்.

**தனுசு**
தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள். பல நாள் வருத்தம் தீரும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணம் உறுதியாகும். மாணவர்கள் கல்வியில் புதிய உத்வேகம் பெறுவார்கள்.

**மகரம்**
இளைஞர்கள் கல்வியில் நன்கு கவனம் செலுத்துவீர்கள். கலைஞர்களுக்கு சிறந்த வாய்ப்பு வரும். சுறுசுறுப்பான நாள். முயற்சி ஒன்று வெற்றியளிக்கும். சேமிக்கும் எண்ணம் தோன்றும்.

**கும்பம்**
வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்கு அவசரம் வேண்டாம். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். கலை ஆர்வம் அதிகரிக்கும். குழந்தைப்பேறு இல்லாத பெண்களுக்கு நல்ல செய்தி உண்டு.

**மீனம்**
நிதி நிலைமை ஓரளவு நல்லபடியாக இருக்கும். எடுக்கும் முயற்சி ஒன்றில் சுமாரான முன்னேற்றம் இருக்கும். அலுவலகப் பணிகளில் சற்று அழுத்தம் இருக்கக்கூடும்.

# உயர் பொலிஸ் அதிகாரிகளை அழைத்து தமிழகத்தின் புதிய ஆளுநர் ஆலோசனை



சென்னை, செப். 23,

தமிழகத்தின் புதிய ஆளுநர் ஆர்.என்.ரவி , பொலிஸ் உயர் அதிகாரிகளை அழைத்துப் பேசி வருவது ஆட்சியாளர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக ஆளுநராக ஆர்.என். ரவி பொறுப்பு ஏற்கும் முன்பே, தி.மு.க. கூட்டணிக் கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.எஸ்.அழகிரி மற்றும் வி.சி.க. கட்சித் தலைவர் திருமாவளவன் இருவரும் ஆளுநருக்கு எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஆளுநர் ரவி, தமிழ்நாடு சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி. சைலேந்திர பாபுவை நேரில் அழைத்து அரை மணி நேரம் பேசினார். அதில் சட்டம் ஒழுங்கு பற்றியும், தமிழகத்தில் மத்திய அரசுக்கு எதிராக தி.மு.க.வினர் நடத்திய போராட்டங்கள் மற்றும் அவர்கள் மீது வழக்குகள் பதியப்பட்டனவா என்பது பற்றியும் கேட்டுள்ளார்.

இதனையடுத்து நேற்று உளவுத் துறை ஏ.டி.ஜி.பி. டேவிட்சன் தேவாசீர்வாதத்தையும் அழைத் துப் பேசினார் ஆளுநர் ஆர்.என்.ரவி. இன்றும், நாளையும் மறுநாளும் உள்துறை செயலாளர் மற்றும் தலைமைச் செயலாளரை அழைத்துப் பேசவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தி.மு.க. ஆட்சியில் புதிய ஆளுநராக வந்திருப்பவர், ஆளுநர் மாளிகைக்கு அதிகாரிகளை அழைத்து ஆலோசனை செய்து வருவது தி.மு.க. வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

# உயிர்கொல்லி தேர்வுதான் 'நீட்' இந்தியாவிலிருந்தே விரட்டவேண்டும்!



சென்னை, செப், 23,

"சமத்துவத்திற்கும், சமூகநீதிக்கும் எதிரான உயிர்க்கொல்லித் தேர்வை நீட். இந்த உயிர்க்கொல்லி தேர்வினை தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவில் இருந்து விரட்டியடிக்க வேண்டும்" என்று மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

"நீட் உயிர்கொல்லி தேர்வு என்பதை உரக்கச் சொல்கிறது நீதிபதி ஏ கே ராஜன் குழுவின் அறிக்கை. நீட் தேர்வின் பாதிப்புகளை ஆராய நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை இந்த தேர்வின் தீவிளைவுகளை பட்டியலிடுகிறது.

அதன்படி கிராமப்புற ஏழை மாணவர்கள் தமிழ் வழியில் பயின்று மருத்துவராகவும் கனவை இந்த தேர்வு சிதைகிறது. நீட்தேர்வுக்கு பின் மருத்துவப் படிப்பில் சேர்ந்த தமிழ் வழியில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை 14 .44 சதவீதத்தில் இருந்து 1.7 சதவீதமாக சரிந்துள்ளது. இது சமூக நீதிக்கு எதிரான தேர்வு என்பதற்கு இந்த ஒரு புள்ளி விவரமே போதுமானது.

நீட் தேர்வு அறிமுகமான பிறகு தமிழ் வழியில் மேல்நிலை கல்வி பயிலும், மாணவர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி நிகழ்ந்துள்ளது. உலகம் முழுக்க தாய் மொழிக்கல்வி ஊக்குவிக்கப்பட்டு வரும் சூழலில் நீட்தேர்வு தாய்மொழிக் கல்விக்கு எதிரான மனநிலையை வளர்க்கிறது" என அவர் தெரிவித்துள்ளார்.

# மத நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்யவேண்டும்

## கோரிக்கை விடுக்கிறார் கே.எஸ்.அழகிரி



சென்னை, செப், 23,

மதநல்லிணக்கத்திற்கு உலை வைக்கின்ற வகையில் கருத்துகளை வெளியிடுகிற சமூக விரோதிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்து கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

"யோகக் குடில் சிவயோகி சிவகுமார் என்ற நபர் இஸ்லாமியர்களைப் பற்றியும், அவர்களால் வணங்கப்படுகிற இறை தூதர் முகமது நபி பற்றியும், அவர்களின் தொழுகை முறைகளைப் பற்றியும் அநாகரீகமாக விமர்சித்துப் பேசி, அதை காணொலியில் பதிவு செய்து வெளியிட்டிருக்கிறார்.

இதுகுறித்து சிவகுமார் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த நடவடிக்கையை மேற்கொண்ட காவல்துறையினரை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். மதநல்லிணக்கத்திற்கு உலை வைக்கின்ற வகையில் கருத்துகளை வெளியிடுகிற சிவகுமார் போன்ற சமூக விரோதிகளை குண்டர் சட்டத்தில் கைது செய்து கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்" என அவர் கூறியுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி பெறுவதில் கர்ப்பவதி தாய்மார்கள் ஆர்வமில்லை!

## ஆபத்து குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிக்கை



யாழ்ப்பாணம், செப்.23

**யாழ்ப்பாணத்தில் இன்னமும் கணிசமான கர்ப்பவதி தாய்மார்கள் மத்தியில் கோவிட்-19 தடுப்பூசிக்கு வரவேற்பு குறைவாக காணப் படுகின்றது. தடுப்பூசியானது ஏனையவர்களைப் போலவே கர்ப்பவதிகளை கோவிட் - 19 தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன் தொற்றி னால் ஏற்படும் பாதிப்புக்களையும் மிகக் கணிசமான அளவில் குறைக்கும். மாறாக இத்தடுப் பூசியானது அதனைப் பெற்றுக்கொள்ளும் கர்ப்பவதிக்கோ, அவரது சிசுவுக்கோ எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.**

-இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கோவிட் - 19 உலகளாவிய தொற்றின் மூன்றாவது அலை நேற்று இலங்கையில் வெகு தீவிரமாகப் பரவி வருவதுடன் இவ்வலையில் இறப்பு வீதமும் மிக அதிகமாக உள்ளது.

கோவிட் - 19 தொற்றுக்கு உள்ளாவதால் இறப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் அதிகம் உள்ளவர்கள் மத்தியில் கர்ப்பவதி தாய்மார்கள் மிக முக்கியமான தரப்பினராவர்.

இலங்கையில் 2020 மார்ச் மாதம் முதல் 2021 செப்ரெம்பர் வரை 6 ஆயிரத்து 49 கர்ப்பவதி தாய்மார்கள் கோவிட் - 19 நோய் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர். இதில் இந்த வருடம் இதுவரை 5 ஆயிரத்து 938 கர்ப்பவதி தாய்மார் தொற்றுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. அவர்களில் இதுவரை 43 தாய்மார்கள் நாடுமுழுவதும் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் தொற்றுக்குள்ளான முதலாவது கர்ப்பவதி பெண்ணின் உயிரிழப்பு கடந்த மே மாதம் 6ஆம் திகதி பதிவானது. கடந்த 5 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் நாடு முழுவதிலும் சராசரியாக எட்டு கர்ப்பவதி தாய்மார்கள் இறப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தமட்டில் இவ்வருடம் இதுவரை 184 கர்ப்பவதி தாய்மார் கோவிட் - 19 தொற்றுக்கு ஆளாகி சிகிச்சை பெற்றுள்ளனர். தரவுகளின் படி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை பதியப்பட்ட ஒவ்வொரு 100 கர்ப்பவதி தாய்மார்களிலும் 3 பேர் கோவிட் - 19 நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் இதுவரை 4 கர்ப்பவதி தாய்மார்கள் உயிரிழந்தமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

பொதுவாக கர்ப்பவதிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி ஓரளவு குறைவடையும். இதன் காரணமாக இலகுவில் கோவிட் - 19 தொற்று உட்பட தொற்று நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளது. தொற்றுக்குள்ளாகிய கர்ப்பவதி தாய்மார்களில் அறிகுறிகள் இன்றியோ அல்லது மெல்லிய அறிகுறிகளுடன் மட்டும் இருப்பினும் கூட இவர்களது உடல்நிலை திடீரென மோசமடைய கூடுமாதலால் அவர்களது சிசுவிற்கு ஆபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம்.

கோவிட்-19 தொற்றுக்குள்ளாகாத கர்ப்பவதி தாய்மார்களைவிட கோவிட் -19 தொற்று உள்ள கர்ப்பவதி தாய்மார்கள் கர்ப்ப கால சிக்கல் நிலைகளுக்காக அதிகமாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்க வேண்டிய தேவையுட்பட, பாதகமான கர்ப்ப விளைவுகளுக்கும், தொற்றுநோயின் நிமித்தம் ஏற்படக்கூடிய காலத்திற்கு முன்னான பிறப்பு, சிசு இறப்பு மற்றும் தாய் மரணத்திற்கும் உள்ளாகின்றனர்.

இதற்கு மேலதிகமாக கர்ப்பவதிகளில் ஏற்கனவே வேறு தொற்றா நோய் நிலமைகள் உடையவர்கள், வயது கூடியவர்கள் மற்றும் உடற்திணிவுச் சுட்டி அதிகரித்தவர்கள் கோவிட் - 19 தொற்றினால் மேலதிக சிக்கல்களை எதிர் நோக்குவதுடன் அதிகளவில் இறப்புக்கும் உள்ளாகின்றனர்.

இந்த நிலையில் மேலதிகமாக கோவிட் - 19 தொற்றினால் கர்ப்பவதி தாய்மார் இறப் பதை தடுப்பதற்கு எமக்கு முன்னால் உள்ள தெரிவுகள் மிகச் சிலவே.

அவையாவன பொதுச் சுகாதார நடைமுறைகளான முகக் கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், சரியான முறையில் கைகளைக் கழுவுதல் என்பவற்றை இறுக்கமாக கடைப் பிடித்தல், மற்றும் தடுப்பூசியை அதிகளவு பெற்றுக் கொடுத்தல் என்பவையாகும்.

இவ்வகையில் பொதுச் சுகாதார நடைமுறைகளை பெருமளவானோர் சரியாகக் கடைப் பிடிக்காமையால் இன்று வரை கோவிட் - 19 தொற்றைக் கட்டுப் படுத்த முடியாது உள்ளது. இந்நிலையில் எமக்கு மீதமாக உள்ள ஒரே ஒரு உபாயம் தடுப்பூசிகளை அதிகளவு பெற் றுக் கொடுப்பதுவே.

எனவே கோவிட் - 19 தாக்கத்தினால் கர்ப்பவதி பெண்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளை குறைப்பதற்காகவே அனைத்து கர்ப்பவதி தாய்மார்களுக்கும் கோவிட் - 19 தடுப்பூசி வழங்கும் திட்டம் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

எனவே, தடுப்பூசியை பெற்றுக்கொள்வதன் மூலம் தாய்க்கும் சேயுக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் வருந்தத்தக்க வகையில் யாழ்ப்பாணத்தில் இன்னமும் கணிசமான கர்ப்பவதி தாய்மார்கள் மத்தியில் இத் தடுப்பூசிக்கு வரவேற்பு குறைவாக காணப் படுகின்றது.

இத்தடுப்பூசியானது ஏனையவர்களைப் போலவே கர்ப்பவதிகளை கோவிட் - 19 தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன் தொற்றினால் ஏற்படும் பாதிப்புக்களையும் மிக கணிசமான அளவில் குறைக்கும். மாறாக இத்தடுப்பூசியானது அதனைப் பெற்றுக்கொள்ளும் கர்ப்பவதிக்கோ, அவரது சிசுவிற்கோ எவ்வித பாதிப்பையும் ஏற் படுத்துவதில்லை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

கர்ப்பவதிகள் இத்தடுப்பூசியை தமது கர்ப்பத்தின் எக்காலத்திலும் பெற்றுக்கொள்ளலாம். இத்தடுப்பூசிகளினால் ஏற்படக்கூடிய மெல்லிய காய்ச்சல், உடற்சோர்வு மற்றும் தடுப்பூசி வழங்கப்பட்ட இடத்தில் வீக்கம் என்பன மட்டுமே ஏற்படலாம். ஆனால் இவையும் மிக மிக அரிதாகவே ஏற்படுவதுடன் அவ்வாறு ஏற்பட்ட போதிலும் உங்கள் சிசுவுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற் படுத்தப் போவதில்லை.

இத்தடுப்பூசியை கர்ப்ப வதி தாய்மார்கள் தமக்குரிய குடும்பநல உத்தியோகத்தர்களை தொடர்பு கொள்வதன் மூலம் அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்கள் மற்றும் ஆதார மருத்துவமனைகள், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை போன்றவற்றில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

கர்ப்பவதி தாய்மாரே கோவிட் - 19 தொற்றுக் கெதிரான தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்வது உங்களையும், உங்கள் சிசுவையும் இக் கோவிட் - 19 தொற்றிலிருந்து பாதுகாப்பதுடன் இச்சமூகத்தையும் பாதுகாப்பதாக அமையும்-என்று கூறியுள்ளார்.

## “பைத்தியக்காரனை அமர சொல்லுங்கள்;

### வடிவேல் சுரேஷை பார்த்துக் கூறிய ரணில்

கொழும்பு, செப். 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடிவேல் சுரேஷ் எம்.பிக்குமிடையில் சபையில் கடும் கடும் சொற்போர் மூண்டது. பாராளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.


இதன்போது சிறப்புரிமை பிரச்னையொன்றை எழுப்பிய வடிவேல் சுரேஷ் எம்.பி.,

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்குள் ஆயுதங்கள் சகிதம் பலவந்தமாக நுழைந்த ஐக்கிய தேசியக்கட்சி முன்னாள் பாராளுன்ற உறுப்பினர்கள் சிலர் சொத்துகளுக்கு சேதம் விளைவித்து, மிரட்டல் விடுத்துள்ளனர். இதனால் எனக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெலிக்கடை பொலிஸில் முறைப்பாடு செய்தும் இன்னும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. எனவே, சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்-என சுட்டிக்காட்டினார்.

இதற்கு பதிலளித்த ரணில், தொழிற்சங்கத்தில் நடந்த விவகாரம் பற்றியும், வழக்கு விசாரணை சம்பந்தமாகவும் விவரித்தார். இடையிடையே வடிவேல் சுரேஷ் எம்.பி. இடையூறு விளைவித்தார். இதனால் கடுப்பான ரணில் விக்கிரமசிங்க, ” அந்த பைத்தியக்காரனை அமரச் சொல்லுங்கள்” - என குறிப்பிட்டார். பைத்தியக்காரன் என்ற வசனத்தை இரு முறைகள் பயன்படுத்தினார். வடிவேல் சுரேஷுக்கு சார்பாக ஹரின் பெர்ணான்டோ கருத்து வெளியிட்டார்.

## யாழ். மாணவி வரோனியா தேசிய ரீதியில் முதலிடம்



யாழ்ப்பாணம், செப். 23

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் தேசிய ரீதியாக நடத்தப்பட்ட திருவிவிலிய கட்டுரைப்போட்டியில் யாழ். மறைமாவட்டத்திலிருந்து பங்குபற்றிய தரம் 11ஐ சேர்ந்த மாணவி செல்வி தியோஜினஸ் வரோனியா ஏஞ்சலின் தேசிய ரீதியில் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டார்.

இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தை சேர்ந்த-இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலய மாணவியான தியோஜினஸ் வரோனியா ஏஞ்சலினுக்கு யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

## ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு!

### நேற்று பச்சைக்கொடி காட்டியது அரசு



கொழும்பு, செப். 23

சிறை தண்டனை அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சாதகமாக பரிசிலிப்பார் என நம்புகின்றேன் என அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதன்போது ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு பல தரப்பினரும் ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ரஞ்சன் ராமநாயக்க சிறை தண்டனை அனுபவிக்கின்றார். எம்.பி. பதவியும் பறிக்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு இரு தண்டனைகள் அவசியமில்லை என்பது எனது தனிப்பட்ட கருத்து. எது எப்படி இருந்தாலும் அவர் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சாதகமான முடிவை எடுப்பார்கள் என நம்புகின்றோம்.” -என்றார் அமைச்சர் டலஸ்.



# லத்வியா ஜனாதிபதியுடன் கோட்டாபய சந்தித்து பேச்சு

நியூயோர்க், செப். 23

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் லத்வியா குடியரசின் ஜனாதிபதி எகில்ஸ் லெவிட்ஸூக்கும் இடையிலான சந்திப்பொன்று, நேற்று முன் தினம் பிற்பகல் இடம் பெற்றது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76ஆவது கூட்டத் தொடரின் அரச தலைவர்கள் மாநாட்டுக்கு மத்தியில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் 25 வருடகால தூதரகத் தொடர்புகளைத் தொடர்ந்து முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்காக, பலமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பது, இரு அரச தலைவர்களதும் கருத்தாக அமைந்திருந்தது.

கோவிட் தொற்றுப் பரவல் காரணமாக, பொருளாதாரம் மற்றும் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் தொடர்பிலும், இரு நாடுகளினதும் அரச தலைவர்கள் அவதானம் செலுத்தியதோடு, தொற்றுப் பரவல் நீங்கியவுடன், இரு நாடுகளினதும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும், கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

கல்வி, டிஜிற்றல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில், இரு நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை அதிகரித்துக்கொள்வது தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் அமைப்பு மாற்றம் பெறவேண்டும் என்பதோடு, ஆசியா, தென்னாபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் தென் அமெரிக்க வலய நாடுகளுக்கு அதிகப்படியான அங்கத்துவம் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும், இரு நாடுகளினதும் அரச தலைவர்களினது அவதானம் செலுத்தப்பட்டது.

வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் ஆகியோரும், இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக சுயேச்சை குழுவின் செல்வேந்திரா தெரிவு

யாழ்ப்பாணம், செப். 23

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா தெரிவாகியுள்ளார்.

ஒரு மேலதிக வாக்கினால் அவர் வெற்றி பெற்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட ரெலோ உறுப்பினர் சதீஸ் 8 வாக்குகளையும் சுயேச்சைக் குழுவின் சார்பில் போட்டியிட்ட செல்வேந்திரா 9 வாக்குகளையும் பெற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பான உப தவிசாளர், சுயேச்சைக் குழுவுக்கு சார்பாக வாக்களித்தார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு அமர்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு நகர சபைக்குரிய மண்டபத்தில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் ஆரம்பமானது.

நேற்றைய அமர்வு கடுமையான சுகாதார நடைமுறைகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது.

வல்வெட்டித்துறை நகர சபை தலைவர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா அண்மையில் கோவிட் -19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே புதிய தலைவரைத் தெரிவு இடம் பெறவிருந்தது.

வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

சுயேட்சைக் குழு 4 உறுப்பினர்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி என்பன தலா 2 உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பன தலா ஒரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளன. (அ-2)

லொஹான் ரத்வத்த விவகாரம்:

# சுயாதீன விசாரணைக்கு ஓய்வு பெற்ற நீதிபதி!

கொழும்பு, செப்.23

**அனுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில், சிறைச்சாலைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவினால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனை தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய நீதியமைச்சர் அலி சப்ரி,

வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் ஒரு போதும் நடந்திருக்கக்கூடாது. அந்த சம்பவங்கள் கண்டிக்கப்படவேண்டும் . அது ஓர் அவமானம்-என்றார்

அதேபோல, மேற்படி சம்பவங்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு உயர்நீதிமன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி விரைவில் நியமிக்கப்படுவார் என்றும் அவர் கூறினார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாக்கும் அதிகார சபை ஆகியன விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு அதிகாரசபை, கைதிகளின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏனெனில் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என்றும் நீதியமைச்சர் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபை

# சட்டமூலம் நிறைவேற்றம்

கொழும்பு, செப். 23

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டமூலம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்த (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 2021 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதற்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காக நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் (திருத்தச்) சட்டமூலம், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் சில பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை குறிப்பிட்டு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்ட பின்னர், அந்தக் கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு விதிக்கப்படும் அபராதம் அதிகரிக்கப்படவுள்ளது.

அதன்படி, தனி வர்த்தகம், நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளாக பதிவு செய்யப்பட்ட அனைத்து வர்த்தகங்கள் தொடர்பிலும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த அபராதம் திருத்தம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தியவன்னா ஓயாவில் எண்ணெய்ப் படலம்

கொழும்பு, செப். 23

தியவன்னா ஓயாவில் எண்ணெய்ப் படலம் மிதப்பதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் உடனடியாக விசாரித்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஜெயசிங்கவை அவர் அறிவுறுத்தியுள்ளார்.

தியவன்னா ஓயாவில் எண்ணெய் படலம் இருப்பதாக இரண்டு நாள்களுக்கு முன்னர் ஒருவர் தகவல் வழங்கி, அது பற்றிய புகைப்படங்களையும் வழங்கியதாக குறிப்பிட்டார். (அ)

# தடுப்பூசிக்கு 100 மில்லியன் டொலர்களை கடனாக பெற அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 23

கோவிட் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக உலக வங்கியிடமிருந்து 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பெறுவதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, கோவிட் -19க்கு மூலோபாய தயாரிப்பு மற்றும் பதில் திட்டத்தின் கீழ் அமெரிக்காவின் 100 மில்லியன் டொலர் கூடுதல் கடன் மானியத்தைப் பெற முன்மொழிந்தார்.

உலக வங்கியும் இலங்கையின் கோவிட் -19 உதவ 100 மில்லியன் அமெரிக்க டொலர் கூடுதல் கடன் வழங்க ஒப்புக்கொண்டது.

14 மில்லியன் டோஸ் பைசர் தடுப்பூசி வாங்குவதற்கும், தடுப்பூசி திட்டம் தொடர்பான பிற செலவுகளுக்கும் நிதியுதவி பெற முடிவு செய்யப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவை யோசனை வருமாறு:

கோவிட் - 19 இற்கான தேசிய பிரயோகங்கள் மற்றும் தடுப்பூசி திட்டமிடல் போன்றவற்றை இயன்றளவு இலங்கையின் சனத்தொகையில் 60 வீதமானவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் அடிப்படை இலக்கை விரிவாக்குவதற்கு கோவிட் முகாமைத்துவத்திற்கான தேசிய செயலணி தீர்மானித்துள்ளது.

அதற்காக கோவிட் - 19 மூலோபாய தயார்படுத்தல்கள் மற்றும் பதிலளிப்புகள் வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கையில் கோவிட் 19 அவசர பதிலளிப்புக்கள் மற்றும் சுகாதாரத்துறையை தயார்படுத்தல் கருத்திட்டத்திற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் மேலதிகக் கடனை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

குறித்த மேலதிக தொகை, 14 மில்லியன் பைசர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கும், தடுப்பூசி வழங்கும் பணிக்கு ஏற்புடைய ஏனைய செலவுகளுக்குமான நிதியிடலுக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த மேலதிக நிதியிடல் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஐ.நா. ஆணையாளர் துரோகி!

## எஸ்.பி. திஸநாயக்க குற்றச்சாட்டு



**கொழும்பு, செப்.23**
**ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் மிச்செல் பச்லெட், தனது அதிகார எல்லையையும், ஐ.நா. விதிமுறைகளையும் அப்பட்டமாகமீறிச் செயல்படுகின்றார் என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் எஸ்.பி. திஸநாயக்க மேலும் கூறியவை வருமாறு:

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கைக்கு எதிராக கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து காரசாரமான விமர்சனங்களை மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் முன்வைத்துள்ளார்.

எனினும், ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ள எமது ஜனாதிபதியை ஐ.நா.செயலாளர் கௌரவத்துடன் வரவேற்றார். ஐ.நாவுடன் இணைந்து பயணிப்பதற்கும், ஐ.நாவின் ஒத்துழைப்பு இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் இதன்போது கூறப்பட்டுள்ளது. மிகவும் சாதகமான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனையொட்டி நாடு என்ற வகையில் பெருமையடைகின்றோம்.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் என்பவர், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அதிகார எல்லை மற்றும் ஐ.நா. பிரகடனங்களைமீறி அப்பட்டமாகமீறி சட்டவிரோதமான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இலங்கைக்குள் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி கதைப்பதற்கு அவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. உள்ளக விவகாரங்களில் கையடிப்பதற்கு இடமில்லை என ஐ.நா. பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறிருக்கையில் மிச்சேல், எம்மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை தொடுத்துவருகின்றார். மிச்சேல் அமெரிக்காவுக்கு சார்பானவர். தனது தாய் நாட்டுக்கு துரோகம் இழைத்தவர்-என்றார் எஸ்.பி. திஸநாயக்க.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சுகாதாரத்துறை ஊழியர்கள் போராட்டம்!

மட்டக்களப்பு, செப். 23
நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுகாதார ஊழியர்கள் நேற்று கவன ஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார துறை ஊழியர்கள் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொது நிர்வாக சுற்றறிக்கையின் படி, அனைத்து சுகாதார ஊழியர்களுக்கும் விசேட விடுமுறை வழங்க வேண்டும், கடமைக்கு சமுகமளிக்காத, இடையூறுகள் உள்ள சுகாதார ஊழியர்களுக்கு, அருகிலுள்ள வைத்தியசாலைகள் அல்லது வைத்திய நிலையங்களில் கடமையாற்றுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் சம்பள அதிகரிப்பு போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டத்தை அவர்கள் முன்னெடுத் தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இந்தப் போராட்டம் நண்பகல் 12மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

# தேர்தல் சட்ட திருத்தம்;
## ஆய்வு குழுவில் ஹக்கீம், பஸில்!

கொழும்பு, செப். 23
தேர்தல் சட்டங்களில் திருத்தம் செய்வது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட பாரா ளுமன்ற தெரிவுக் குழுவில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.இந்த முடிவை சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்றுக் காலை பாராளுமன்றத் துக்கு தெரிவித்தார்.

21 செப்ரெம்பர் 2021 அன்று பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி இந்த பாராளுமன்றத் தெரிவுக் குழு, தேர்தல் மற்றும் தேர்தல் கட்டமைப்பு மற்றும் விதிகளை திருத்த நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இதுவரை பல அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டுள்ளது. அதன் இறுதி அறிக்கை வரும் நவம்பரில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

சபைத் தலைவர், அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவராக உள்ளார்.

# யானையையும் குட்டியையும் தனியாருக்கு வழங்க தடை!

கொழும்பு, செப். 23
வனஜீவராசிகள் திணைக்களத்தின் பாதுகாப்பில் உள்ள சுஜீவ என்ற யானையையும் அதன் மூன்று மாத குட்டியையும் விடுவிக்க தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

இந்த இடைக்கால உத்தரவு இம்மாதம் 29 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகிறது.

மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அடுத்த உத்தரவு வரும் வரை யானை மற்றும் அதன் குட்டியை வனஜீவராசிகள் திணைக்களத்தின் பராமரிப்பில் வைத்திருக்க உத்தரவிடப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவை கொழும்பு நீதிவான் நீதிமன்றப் பதிவாளருக்கு அறிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது.

யானை மற்றும் குட்டியை எந்த தரப்பினருக்கும் வழங்கக் கூடாது என தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனுக்களை பரி சீலித்து மேல்முறையீட்டு நீதி மன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

# 6.8 கோடி ரூபா பெறுமதியான கஞ்சா நறுவிலிக்குளம் பகுதியில் நேற்று மீட்பு!

மன்னார், செப். 23
நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம்-நறுவிலிக்குளம் கடற்கரைப் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 68 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகளை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை வங்காலை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

வங்காலை கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை அச்சங்குளம்-நறுவிலிக் குளம் கடற்கரைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி கஞ்சா பொதிகளை கடற்படையினர் மீட்டனர்.

இதன்போது சுமார் 228 கிலோ எடை கொண்ட கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு,இதன் இலங்கை பெறுமதி 68 மில் லியன் ரூபாய் என தெரிய வந்துள்ளது.

எனினும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்பட வில்லை. மேலதிக நடவடிக்கைகளை கடற்படையினர் மேற் கொண்டு வருகின்றமை குறிப் பிடத் தக்கது.







# பொலிகண்டியில் குடும்பங்களுக்கு உலர் உணவு

யாழ்ப்பாணம், செப். 23
பருத்தித்துறை, பொலிகண்டியில் வாழும் 100 குடும்பங்களுக்கு, உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ரொரண்டோ-கனடா நேயம் பவுன்டேஸன் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன், தலா 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள், நேற்று வழங்கப்பட்டன.

இதன் போது, கிராம சேவகர் மற்றும் நேயம் பவுன்டேஸன் நிறுவன அங்கத்தினர் பங்கேற்றனர்.

# வவுனியாவில் தொற்றால் மரணித்தோரில் 89 வீதமானவர்கள் தடுப்பூசி போடாதோர்!

வவுனியா, செப். 23
வவுனியாவில் கோவிட் தொற்று காரணமாக மரணமடைந்தவர்களில் 89.25 வீதமானவர்கள் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளாதவர்கள் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கோவிட் தொற்று பரவல் தொடர்ந்தும் இருந்து வரும் நிலையில், இறப்புக்களும் தொடர்கின்றன. இந்த நிலையை கருத்தில் கொண்டு மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக வீடுகளில் இருப்பதன் மூலமே நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

வவுனியா மாவட்டத்தில் கொவிட் தொற்று காரணமாக ஏற்பட்ட மரணங்களில் 89.25 வீதமானவர்கள் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்கள். 10.75 வீதமானவர்கள் தடுப்பூசியின் ஒரு டோஸை மட்டும் பெற்றுக் கொண்டவர்கள். தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக் கொண்ட எவரும் இது வரை வவுனியாவில் கொவிட் காரணமாக மரணிக்கவில்லை.

எனவே, 20 வயதுக்கு மேற்பட்டோர் கோவிட் தடுப் பூசிகளைப் பெற்று உங்கள் பாதுகாப்பை மேலும் உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# வல்வெட்டித்துறையில் தேசியம் அடித்து வீழ்த்தப்பட்டிருக்கிறது

## எம்.கே.சிவாஜிலிங்கம் கவலை



யாழ்ப்பாணம், செப். 23
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் ஒருவர் துரோகத்துக்கு விலைபோனதால் ஆட்சி வீழ்த்தப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அங்கஜன், சுமந்திரனின் ஆசீர்வாதத்தோடு வல்வெட்டித்துறையில் தமிழ்த் தேசியம் அடித்து வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை நகர சபை தலைவர் தேர்வு தொடர்பாக கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வல்வெட்டித்துறை நகரசபைக்கான தலைவர் தேர்தலில் தமிழ்த் தேசியத்தை சீர்குலைக்க கூடிய விடயங்கள் நடைபெற்று சுயேச்சைக் குழுவின் தலைவரான செல்வேந்திரா தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளாரென வும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு எதிராக இலங்கை செயல்படவில்லை

## பல காரணங்களினால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் நல்ல நிலையில் இல்லை

ஏ.யதீந்திரா



## இந்திய அரசியல் ஆய்வாளர் ஸ்ரீராதா டத்தா நேர்காணல்

புதுடில்லியில் அமைந்திருக்கும் விவேகானந்தா சர்வதேச மன்றத்தில் அயலக ஆய்வுகளுக்கான நிலையத்தின் தலைவராக இருக்கும் ஸ்ரீராதா டத்தா வின் நேர்காணல். இந்திய - இலங்கை இருதரப்பு உறவுகளின் நிலை மற்றும் பிராந்திய நிலவரம் பற்றி விரிவாக ஆராயப்பட்டிருக்கும் இந்த நேர்காண லின் தமிழ் மொழிபெயர்ப்பை கேள்வி, பதில் வடிவில் இங்கே தருகிறோம்.

**கேள்வி :** இந்தியாவுக்கான இலங்கை யின் புதிய உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட இரு நாடுகளுக்கும் இடை யில் "அதிகரித்துவரும் நம்பிக்கைப் பற்றாக்குறையை ஏற்றுக்கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட மூலோபாயம் ஒன்றின் அவசியம் பற்றி பேசியிருக்கி றார். இரு தரப்பு உறவுகளில் நெருக்கடி யொன்று இருப்பதை அவர் சூசகமாக ஏற்றுக்கொள்கிறார். இந்தியாவின் அயலக கொள்கையில் ஒரு நிபுணர் என்ற வகையில் இவற்றையெல்லாம் நீங்கள் எவ்வாறு வியாக்கியானம் செய்கிறீர்கள்? ஒருங்கிணைக்கப்பட்ட மூலோபாயம் ஒன்று பயன்தருமா?

**பதில் :** இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையிலான இருதரப்பு உறவுகள் வெறுமனே போர்ப் பிரச்னை காரண மாக மாத்திரமல்ல, பல்வேறு காரணங்க ளின் நிமித்தமும் அண்மைக்காலமாக சிறப்பானவையாக இருக்கவில்லை. என்றாலும், ஜனாதிபதியாக கோட்டா பய ராஜபக்ஷ பதவியேற்ற பிறகு தனது முலாவது வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கே மேற்கொண்டார். இது பரந்தளவிலான இந்திய - இலங்கை உறவுகளின் முக்கியத்துவத்தை உணர்த்து கிறது. அதேவேளை, பயன்படுத்தப்படா திருக்கும் பல வாய்ப்புக்கள் பற்றியும் கவனத்தில் எடுக்கவேண்டியிருக்கிறது. இலங்கை வெளியுறவு செயலாளர் அட் மிரல் கொலம்பகேயும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் 'இந்தியா முதலில்' அம்சத்தை மீளவலியுறுத்தியி ருந்தார். அடிப்படையில் நோக்குகையில் இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு எதிராக கொழும்பு செயல்படவில்லை. கூட்டு இராணுவ பயிற்சிகள் உட்பட பல இருதரப்பு திட்டங்களில் இந்தியாவும் இலங்கையும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தீர்க்கப்படாத சில பிரச்னைகள் நிச்சயமாக இருக்கின்றன.ஆனால், இரு அயல் நாடுகளும் ஒன்றுக்கொன்று முக்கியமானவை.பல விவகாரங்களில் தொடர்ந்து நெருக்கமாக பணியாற்று கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, வெளியுறவுகள் விசை இயக்கமுடை யவை. ஒவ்வொரு அரசாங்கமும் ஒரே மாதிரிச் செயற்படும் என்று எதிர்பார்ப் பது யதார்த்தபூர்வமற்றது. அதே வேளை,கடந்தகால செயற்பாடுகள் மற்றும் ஊடாட்டங்கள் ஊடாக நிறுவப்பட்டிருக்கும் ஒத்துழைப்புக் கட்டமைப்பை நிலைபேறானதாக வைத் திருக்கவேண்டிய முக்கியத்து வத்தை இரு நாடுகளின் தலைவர்களும் புரிந்து கொள்கிறார்கள். கடந்த கால நிகழ்வுப் போக்குகள் இரு தரப்பு உறவுகளில் தாக்கத்தைக் கொண்டிருக்கவே செய்யும். சில அரசாங்கங்கள் பழைய பிரச்னை களுக்கு வித்தியாசமான முறையில் பிரதி பலிப்பை வெளிக்காட்டும் ஒத்திசைவில் லாத போக்கை தற்காலிகமாக வெளிக் காட்டும்.ஆனால், ஒட்டுமொத்த நிலை வரத்தைப் பொறுத்தவரை, எந்த தரப்புக் கும் பாதகம் ஏற்படுவதாக இல்லை.

எவ்வாறெனினும், தீர்க்கப்படாமல் இருக்கும் இருதரப்பு பிரச்சினைகளை ஒத்துக்கொள்ளவேண்டும் அவற்றை கையண்டு தீர்த்துக்கொள்ளவேண்டும். வேறுபட்ட சில நோக்குகள் இருக்கத் தான் செய்யும். ஆனால், தற்போதைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு பல்வேறு இராஜதந்திர மற்றும் உப தேசிய இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**கேள்வி :** இந்து சமுத்திர பிராந்தியத் தில் சீனா ஊடுருவல்களைச் செய்து வரு கின்றது. இந்த பின்புலத்தில், சீனாவுக் கும் இலங்கைக்கும் இடையிலான நெருக் கம் இந்தியாவுக்கு நல்லதல்ல என்ற அவதானிப்பு ஒன்று இருக்கிறது. இந்தியா பாரதூரமான பின்னடைவுகளைச் சந்திக் கிறதா? உங்களுடைய சிந்தனை என்ன?

**பதில் :** கடந்த தசாப்தத்தில் தெற் காசிய பிராந்தியத்தில் சீனாவின் ஈடுபாடு கவனத்தை ஈர்ப்பதாக இருந்து வருகி றது. சீனாவிடமிருந்து பெருமளவு பொருளாதார ஆதரவைப் பெற்றிருக்கும் அயல் நாடுகளில் இலங்கையும் ஒன்று. அது குறித்து சஞ்சலம் உண்டு. சீன - இந்திய பகைமை மற்றும் அதிகரித்து வரும் சீன - இலங்கை தோழமை ஆகியவற்றின் பின்புலத்தில் இந்தியா வுக்கு விரோதமான சில செயல்பாடுகள் எப்போதுமே சாத்தியம் என்ற நம்பிக்கை ஒன்றும் புதுமையானதல்ல. அது தவிர்க்கமுடியாததும் கூட.

கொழும்பின் சில அண்மைக்காலத் தீர்மானங்கள் சீனாவுக்கு அனுகூலமாக இருந்துவந்திருக்கின்ற அதேவேளை, அவற்றில் சில இந்தியாவின் நலன்களை மலினப்படுத்தியிருக்கின்றன. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுடனும் ஜப்பா னுடனும் சேர்ந்து இலங்கை 50-70 கோடி டொலர்கள் செலவில் அபிவி ருத்தி செய்வதற்காக கைச்சாத்திடப்பட்ட முத்தரப்பு உடன்படிக்கையை ரத்ததுச் செய்வதற்கு கொழும்பு எடுத்த தீர்மானத் துக்கு பிறகு இந்தியாவின் அச்சம் அதி கரித்தது. பொதுமக்களின் எதிர்ப்பை அதற்கு காரணமாக கூறிய இலங்கை மேற்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு கொடுக்க முன்வந்தது. ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப் போன்று இது தனது பாதுகாப்பு அக் கறைகளைப் பாதிப்பதாக புதுடில்லி உணருகிறது.

மேலும், இது இந்தியாவும் இலங்கை யும் 1987 ஆம் ஆண்டில் கைச்சாத்திட்ட உடன்படிக்கையின் ஒரு மீறலாகவும் அமைந்தது.இலங்கையோ இந்தியாவோ ஒன்றின் ஐக்கியம், ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பை பாதிக்கக்கூடிய நடவடிக் கைகளுக்கு மற்றையதன் துறைமுகங்கள் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று அந்த உடன்படிக் கையில் கூறப்பட்டிருக்கிறது.

கொழும்பு துறைமுகநகர பொருளா தார ஆணைக்குழு சட்டமூலம் 24 மே 2021 இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. துறைமுகநகர திட்டம் இந்திய கரையோரத்தில் இருந்து 300 கிலோ மீட்டர்களுக்கும் குறைவான தூரத்திலேயே அமைந்திருக் கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தூரம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் மற்றும் பல இந்து சமுத்திர பிராந்திய அரசுகளுக்கும் தீர்க்கமான ஒரு இடை வெளியாகும். இந்த சட்டமூலம் நிறை வேற்றப்படுவதற்கு முன்னதாக, கொழும்பு யாழ்ப்பாணக் குடாநாட் டுக்கு அப்பால் இருக்கும் சிறிய தீவுகளில் 12 மில்லியன் டொலர்கள் செலவிலான மின்சக்தி திட்டத்தை மூன்று புதுப்பிக் கத்தக்க சக்தி ஆலைகளாக கூட்டாக அபிவிருத்திசெய்வதற்கு சீன நிறுவனம் ஒன்றுக்கு கையளித்தது.இந்த தீவுகள் தமிழ்நாடு கரையோரத்தில் இருந்து 50 கிலோ மீட்டர்களுக்கும் குறைவான தூரத்தில் அமைந்திருக்கின்றன.

**கேள்வி :** இலங்கைக்கும் இந்தியா வுக்கும் இடையிலான இருதரப்பு உறவு களைத் தீர்மானிப்பதில் செல்வாக்குமிக்க ஒரு காரணியாக தமிழ்நாடு விளங்குவ தாக கூறப்படுகிறது. ஆனால், மத்தியில் தற்போது ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதா அரசாங்கம் பலமுடையதாக இருக்கிறது. மாநிலங்களின் அபிப்பி ராயங்களினால் அது செல்வாக்கிற்கு உட்படுவது சாத்தியமில்லை. அதே வேளை, பாரதிய ஜனதாவுக்கு தமிழ்நாட் டில் கெட்டியான ஓர் ஆதரவுத்தளமும் கிடையாது. ஆனால், மீனவர்கள் பிரச்னையிலும் இலங்கைத் தமிழர் பிரச்னையிலும் தமிழ்நாடு மத்தி மீது நெருக்குதலைப் பிரயோகிக்கிறது. முதலமைச்சர் மு.க.ஸ்ராலின் இந்தியா வில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளுக் காக நலன்புரித் திட்டங்களை அண்மை யில் அறிவித்தார். தமிழ்நாடு கொழும் புக்கு எதிரான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கிறது. இவையெல்லாவற் றையும் நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர் கள்? இந்திய - இலங்கை உறவுகளை தீர்மானிப்பதில் தமிழ்நாட்டுக்கு எந்த செல்வாக்கும் இருக்கிறதா?

**பதில் :** இந்திய வெளியுறவுக் கொள்கை மீது சில செல்வாக்கை மாநிலங்கள் கொண்டிருக்கின்றன. ஆனால், நாட்டின் வெளியுறவுக் கொள்கை வகுக்கப்படும்போது வேறு காரணிகள் கூடுதல் செல்வாக்கு செலுத்துகின்றன. தமிழர் பிரச்னை ஒரு முக்கியமான காரணியாக இருந்துவரு கிறது. சகல இந்திய தலைவர்களுக்கும் அது தெரியும். தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா அல்லாத ஒரு கட்சியின் ஆட்சியே இருக்கின்ற போதிலும் கூட தமிழர் பிரச்சினையை மத்திய அரசாங் கம் எப்போதும் அக்கறையுடன் அணுகுகிறது. மத்திய அரசாங்கத்தினால் சாத்தியமில்லாத குறிப்பிட்ட சில யோசனைகள் மற்றும் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை மாநில அரசாங்கம் கொண்டிருக்கும் வாய்ப்புகளும் இருக்கின்றன.

இலங்கைத் தமிழர்களின் உரிமை களை உறுதிப்படுத்தவேண்டிய அவசியத் தையும் அதிகாரப் பரவலாக்கல் உறுதி மொழியையும் இரு தரப்பு பேச்சுவார்த் தைகள் பலவற்றில் பிரதமர் மோடி எவ்வாறு முக்கியத்துவப்படுத்தி வந்திருக் கிறார் என்பதை நாம் பார்த்திருக்கி றோம். மத்தியும் மாநில அரசாங்கங்க ளும் வேறுபாடுகளைக் கொண்டிருக்க லாம், ஆனால் தமிழர்களின் உரிமை களும் பிரச்னைகளும் இந்தியாவுக்கு முக்கியமானவை. மத்தியில் யார் ஆட்சி யில் இருந்தாலும் இது முக்கியமான ஒரு விவகாரமாக நிலைத்திருக்கும்.

**கேள்வி :** இலங்கையின் வடக்கு - கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றி இந்தியா தொடர்ந்து பேசிவருகி றது. இந்திய - இலங்கை சமாதான உடன் படிக்கையின் விளைவாக வந்த 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப் படையிலான அரசியல் இணக்கத் தீர் வொன்றில் இந்தியா அக்கறை கொண்டி ருக்கிறது. ஆனால், நடைமுறைப்படுத்த லில் முன்னேற்றம் இல்லை. தமிழ்த் தலைவர்கள் இது விடயத்தில் இந்தியா வின் தலையீட்டை நாடிநிற்கிறார்கள். தமிழர் பிரச்னையில் பாரதிய ஜனதா அரசாங்கம் விசேட கவனம் செலுத்துவ தற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?

**பதில் :** இலங்கைத் தமிழர் பற்றியும் 13வது திருத்தம் பற்றியும் இந்தியா அதன் நிலைப்பாடுகளை அடிக்கடி மீளவலியுறுத்தி தெரிவித்து வந்திருக்கி றது. இலங்கையின் தற்போதைய தலைவர்களின் அறிக்கைகள் இது விடயத்தில் அவர்களிடம் காணப்படும் பிடிவாதத்தை வெளிக்காட்டுகின்றன. இன்னொரு நாடு வற்புறுத்துவதற்கோ செல்வாக்கு செலுத்துவதற்கோ மட்டுப்பாடுகள் உண்டு.ஆனால், இந்த விவகாரம் இந்திய நிகழ்ச்சி நிரலில் உச்சத்தில் தொடர்ந்து இருக்கிறது. •

# மீண்டும் சிறுபான்மை அரசை அமைக்கும் ஜஸ்ரின் ட்ரூடோ

ரொறன்ரோவிலிருந்து
குரு அரவிந்தன்



இம்முறையும் கனடா தேர்தல் முடிவுகள் ஜஸ்ரின் ட்ரூடோவின் லிபரல் கட்சிக்குச் சாதகமாக வந்திருக்கின்றன. இப்படித்தான் வரும் என்று முன்பு எழுதிய கட்டுரையிலும் குறிப்பிட்டது போலவே, நடந்திருக்கின்றது. 170 ஆசனங்கள் இருந்தால்தான் இங்கு பெரும்பான்மையுடன் தனியாக ஆட்சி அமைக்க முடியும். லிபரல் கட்சிக்கு 158 ஆசனங்களே கிடைத்திருக்கின்றன. ஏனைய எதிர்கட்சிகள் கொள்கையின் அடிப்படையில் ஒன்றுசேர வாய்ப்பில்லை என்பதால், லிபரல் கட்சிதான் இம்முறையும் கனடாவில் சிறுபான்மை ஆட்சி அமைக்க இருக்கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் நடந்த இந்தத் தேர்தல் பற்றி குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி 6மணி வரை முற்கூட்டியே வாக்களிக்கும் வசதிகளை தேர்தல் கனடா ஏற்பாடு செய்திருந்தது. அதனால் முற்கூட்டியே வாக்களித்தவர் தொகை 5.8 மில்லியனாக இருந்தது. இதைவிட சுமார் ஒரு மில்லியன் மக்கள் தபால் மூலமும் வாக்களித்திருக்கிறார்கள். 2019 ஆண்டு நடந்த தேர்தலைவிட இம்முறை அதிகமாக வாக்களித்திருந்தனர். இம்முறை சுமார் 37 மில்லியன் வாக்காளரின் பெயர்கள் பட்டியலில் பதிவாகி இருந்தது.

கோவிட் - 19 காரணமாக கடைசி வரை காத்திருப்பதை தவிர்ப்பதற்காக முற்கூட்டியே அதிக மக்கள் வாக்களித்திருந்தனர். இறுதி நாளான 20 ஆம் திகதி மாலை 9:30 வரை வாக்குச் சாவடிகள் திறந்திருந்தன.

எந்தக் கட்சியாக இருந்தாலும், தனியாக அரசமைப்பதற்குக் குறைந்தது 170 ஆசனங்கள் தேவை. முதலாவது தேர்தல் முடிவு சுமார் 7:10 மணியளவில் வெளிவந்தபோது லிபரல் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. தபால் வாக்குகள் எண்ணப்பட்டால், முடிவுகளில் சிலசமயம் மாற்றங்கள் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

20 ஆம் திகதி சுமார் 3 மணியளவில் எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட செய்தியாக இருந்தது. 'லிபரல் கட்சி முன்னணியில் நிற்கின்றது. எங்களுக்கு இந்தத் தேர்தலில் மாற்றம் தேவை, மறந்திடாமல் உடனே சென்று வாக்களியுங்கள்' என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

முகநூலில் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவின் முகத்திற்குக் கறுப்பு நிறம் பூசி, தலையில் தலைப்பா அணிந்து ஒரு அரேபியர் போலப் படத்தைப் போட்டு அவரை ஒரு கோமாளி என்றும் சிலர் கேலி செய்திருந்தார்கள். பிரதமர் 'பெண்களை மதிக்கத் தெரியாதவர்' என்றும் பரவலாகச் செய்திகளை ஒரு கூட்டத்தினர் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். எப்பொழுதுமே தவறான நோக்கத்தோடு போராடக் கிளம்புபவர்கள், தங்கள் இயலாமையை வெளிக்காட்டப் பெண்களையும், குழந்தைகளையும்தான் பலிக்கடாவாக்குவார்கள். இது எங்கள் கடந்த கால வாழ்க்கையில் மட்டுமல்ல, சரித்திரமும் எமக்குச் சொல்லித்தந்த பாடம்.

பெரும்பான்மை இல்லாமல் இதுவரை ஆட்சி செய்த பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ ஆட்சியைக் கலைத்துவிட்டு புதிய அரசை அமைக்க விரும்பினார். மக்களின் வரவேற்பு இருக்கும் என்றுதான் அவர் எதிர்பார்த்தார். ஆனால், கோவிட்-19 ஐ சாட்டாக வைத்து தடுப்பூசி போட்டுக் கொள்ள விரும்பாத சிலர் எதிப்பு ஊர்வலங்கள் நடத்த முற்பட்டனர். 'இப்போது தேர்தல் தேவையா?' என்றும் குரல் எழுப்பினர். சிலர் வன்முறைகளிலும் ஈடுபடத் தொடங்கினர். இப்படியான வன்முறையாளர்களிடம் ஆட்சிப் பொறுப்பு சென்றால் என்ன நடக்கும் என்பதை வாக்காளர் நன்கு உணர்ந்திருந்தார்கள்.

எத்தனையோ நாடுகள் தடுப்பூசி கிடைக்வில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்க கனடாவில் ஒரு கூட்டத்தினர் தடுப்பூசி போடமாட்டோம் என்று எதிப்பு ஊர்வலங்கள் நடத்தினார்கள். எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல, இதை எதிர்கட்சியினர் தேர்தல் பிரச்சாரமாக மாற்ற முயற்சிகள் செய்தும் பார்த்தார்கள். பிரதமர் ட்ரூடோவை மட்டுமல்ல, திருமதி. ட்ரூடோவையும் தகாத வார்த்தைகளால் பொது வெளியில் திட்டுவதற்கும் தொடங்கியிருந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் தங்கள் இயலாமையை வெளிக்காட் டும் நோக்த்தோடு, பிரிட்டிஷ் கொலம்பியாவில் நடந்த ஊடகவிய லாளர் சந்திப்பின் போது, ட்ரூடோவின் மனைவியை 'மோசமான பெண்' என ஒருவர் திட்டிய போது, ட்ரூடோ மிகவும் கோபமாக அவருக்குப் பதிலளித்தார்.

> தமிழ் வேட்பாளர்களைப் பொறுத்தவரையில் லிபரல் கட்சியில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி 16,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கின்றார். ஏற்கனவே அமைச்சராக இருக்கும் அனிதா ஆனந்தும் 14,511 வாக்குகள் பெற்று ஓக்வில் தொகுதியில் வெற்றி பெற்றிருக்கின்றார். வன்கூவரில் என்.டி.பியில் போட்டியிட்ட அஞ்சலி அப்பாதுரை, மற்றும் கொன்சவேட்டிவ் கட்சியில் ஸ்காபரோ மத்தியில் போட்டியிட்ட மல்கம் பொன்னையன் ஆகியோர் இரண்டாவதாக வந்திருக்கிறார்கள்

என்னதான் இருந்தாலும், பெண்களைத் தரக்குறைவாகப் பேசினால், கனடியப் பெண்களால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. இதனால் பெண்ணிய வாதிகள் கட்சி பேதம் பார்க்காது வெகுண்டெழுந்தனர். பெண்களின் எதிர்பைச் சந்தித்தால் என்ன நடக்கும் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் வெளிப்டையாகக் காட்டியிருக்கின்றன. கோவிட் - 19 பேரிடர் ஒரு முக்கிய காரணமாக தேர்தல் பிரசாரத்தில் இடம் பெற்றாலும், கதைகளில் வரும் திடீர் திருப்பத்தைப் போல, கனடா தேர்தலில் பெண்கள்தான் திருப்பத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

தடுப்பூசி என்பது உலகநாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று. கோவிட் - 19 பரவாமல் இருப்பதற்குத் தற்போது கிடைத்திருக்கும் பாதுகாப்பு இந்தத் தடுப்பூசி ஒன்றுதான். இங்கே எல்லா வசதிகள் இருந்தும், தடுப்பூசிகள் இலவசமாகக் கிடைத்தும் அதைப் போட்டுக் கொள்ள மறுப்பவர்களை என்ன செய்யலாம்? சமூகத்தோடு ஒன்றிப் போகமறுக்கும் இவர்கள் எப்படியானவர்கள் என்பதை அந்தந்தச் சமூகங்கள் புரிந்து கொண்டிருந்தன. இப்படியான ஓர் இடர்காலத்தில் இதைவிடப் பெரிதாக எந்தவோர் அரசும் சாதித்துவிடப் போவதில்லை என்பதை மக்கள் புரிந்து கொண்டதால், தேர்தல் முடிவுகளும் அதற்கேற்ப அமைந்திருக்கின்றன.

கனடாவில், சென்ற திங்கட்கிழமை நடந்த 338 தொகுதிகளுக்கான தேர்தலில், தமிழ் வேட்பாளர்களில் ஆறு பேர் ஒன்ராறியோ மாகாணத்திலும், இருவர் பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்திலும், ஒருவர் சஸ்கச்சுவான் மாகாணத்திலும், இன்னும் ஒருவர் குபெக் மாகாணத்திலும் போட்டியிட்டனர். இவர்களில் இருவர் சுயேட்சையாகப் போட்டியிட்டனர். முதற்தடவையாக அதிக தமிழர்கள் போட்டிபோட முன்வந்திருந்தது பாராட்டுக்குரியது.

ஏற்கனவே அங்கத்தவராக இருக்கும், லிபரல் கட்சியில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி 16,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கின்றார். இதுபோல, ஏற்கனவே அமைச்சராக இருக்கும் அனிதா ஆனந்தும் 14,511 வாக்குகள் பெற்று ஓக்வில் தொகுதியில் வெற்றி பெற்றிருக்கின்றார். வன்கூவரில் என்.டி.பியில் போட்டியிட்ட அஞ்சலி அப்பாதுரை, மற்றும் கொன்சவேட்டிவ் கட்சியில் ஸ்காபரோ மத்தியில் போட்டியிட்ட மல்கம் பொன்னையன் ஆகியோர் இரண்டாவதாக வந்திருக்கிறார்கள்.

### கனடா தேர்தல் முடிவுகள்

| | 2021 | 2019 | 2015 |
|---|---|---|---|
| லிபரல் | 158 | 157 | 184 |
| கொன்சவேட்டிவ் | 119 | 121 | 99 |
| குபெக்குவா | 34 | 32 | 10 |
| என்.டி.பி | 25 | 24 | 44 |
| கிறீன் | 02 | 03 | 01 |
| மக்கள் கட்சி | - | 01 | - |

இவர்களைவிட லிபரல் கட்சியில் சஸ்கச்சுவானில் அல்போன்ஸ் ராஜகுமார், புதிய கிறீன் கட்சியில் அர்ஜூன் பாலசிங்கம், சஜந்த் மோகனகாந்தன், மக்கள் கட்சி சார்பாக ஜோர்ச் அன்ரனி, குபெக்குவா சார்பாக ஷோபிகா வைத்தியநாத சர்மா, சுயேச்சை யாக பிராம்டன் மேற்கில் சிவகுமார் ராம சாமி ஆகியோரும் போட்டியிட்டனர்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, ஆட்சி அமைக்கப்போகும் லிபரல் கட்சி இது போன்ற பல பிரச்னைகளை இனி சந்திக்க வேண்டி இருக்கும். லிபரல் அமைச்சர்களான மரியம் மொன்சிவ், பெர்னாட்டி ஜோடன் போன்றோர் இம்முறை தோல்வி அடைந்ததால், புதிய முகங்கள் அமைச்சரவைக்கு வரலாம். லிபரலுக்குப் பெரும்பான்மை கிடைக்காததால், இன்னும் 18 மாதத்தில் மீண்டும் ஒரு தேர்தல் கனடாவில் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.


இம்முறை என்.டி.பி கட்சி 25 இடங்களைப் பெற்றிருப்பதால், அரசுக்கு ஆதரவு கொடுப்பதன் மூலம் தங்கள் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ள முடியும். மக்கள் கட்சிக்கு ஆசனங்கள் எதுவும் இம்முறை கிடைக்கவில்லை. சுமார் 600 மில்லியன் டொலர்கள் இந்த தேர்தலுக்காகச் செலவிடப்பட்டதால், பொதுமக்களின் கோடிக்கணக்கான பணம் விரயமாகிறது என்பதையும் சிலர் சுட்டிக்காட்டியிருந்தனர். எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம், அரசியலில் எதுவும் நடக்கலாம், காலம்தான் பதில் சொல்லவேண்டும்.



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I,II
நேரம் : 1 மணித்தியாலம்

23. 
அருகே ஒரு திண்மப் பொருள் தரப்பட்டுள்ளது.
(i) இந்தத் திண்மப் பொருளின் பெயர் யாது?
: ..................................................
(ii) இத்திண்மத்திற்கு எத்தனை முகங்கள் உள்ளன?
: ..................................................

24. பிற்பகல் 10.20 என்பது இருபத்து நான்கு மணிக்கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.
: ..................................................

25. ஒரு தாங்கியில் இருந்த பாலில் இருந்து $11l\ 750ml$ பால் விற்கப்பட்டதன் பின்னர் எஞ்சியிருந்த பாலின் கனவளவு $6l\ 900ml$ ஆகும். தாங்கியில் முதலில் இருந்த பாலின் அளவை $l, ml$ இல் தருக.
: ......................$l$ ......................$ml$

26. 618 இனை 3 இனால் வகுக்கும் போது விடை யாது? : ..................................................

27. $5m\ 50cm$ நீளமுள்ள ஒரு பூம்பாத்தியை மறுபடியும் அமைத்த போது அதன் நீளம் $7m\ 20cm$ ஆக இருந்தது. அதன் அதிகரித்த நீளம் யாது?
: ......................$m$ ......................$cm$

28. 6kg 250g தேயிலையை ஒரு பைக்கற்றில் 250g வீதம் எத்தனை பைக்கற்றுக்களில் இடலாம்?
: ..................................................

29. பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | ஒன்றின் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| அரிசி | 84 | 50 | 2kg | (i) ........... | ........... |
| சீனி | 118 | 00 | (ii) ........... | 59 | 00 |
| தேயிலை | 300 | 00 | (iii) ........... | 75 | 00 |
| மொத்தப் பணம் | | | | 303 | 00 |

- இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ் கோடிடுக.**

30. இலங்கைத் தேசியக் கொடியில் காணப்படுவது
(1) மஞ்சள் நிறப் பின்னணியில் சிவப்பு நிற வாளேந்திய சிங்க உருவம்.
(2) சிவப்பு நிறப் பின்னணியில் செம்மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம்.
(3) சிவப்பு நிறப் பின்னணியில் மஞ்சள் நிற வாளேந்திய சிங்க உருவம்.

31. உள்ளத்தை இதப்படுத்தும் செயற்பாட்டின் இறுதிப் படிமுறை எது?
(1) பிரார்த்தனை (2) மலர்வு (3) உள்ளத்தைத் தளர்த்துதல்

32. இலங்கையின் தேசிய இலச்சினையில் உள்ள சூரியனும் சந்திரனும் குறிப்பது,
(1) தன்னிறைவு (2) நிலைத்திருப்பு (3) சௌபாக்கியம்

33. சின்னமுத்து, கொப்பளிப்பான் ஆகிய நோய்களுக்கான நோய்க் காவி,
(1) நுளம்பு (2) ஈ (3) மனிதன்

34. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலைகளை மட்டும் கொண்ட விடை எது?
(1) பப்பாசி, நெல்லி (2) சாத்தாவாரி, வல்லாரை (3) கோப்பை இலை, அகத்தி

35. உணவு உண்ணும் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று,
(1) உணவை விழுங்குவதற்கு முன் அதனைப் போதியளவு மெல்லுதல்.
(2) உணவை உண்ணும் போது மற்றையவர்களுடன் சிரித்துப் பேசுதல்.
(3) உணவாக உட்கொள்ளாத பச்சைமிளகாய், கொரக்கா போன்றவற்றைத் தரையில் அல்லது மேசையில் போடுதல்.

36. நாய் கடித்த ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது,
(1) கடித்த இடத்தைத் தூய தண்ணீரால் சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்
(2) கடித்த இடத்தைத் துணிக் கீலங்களினால் கட்டுதல்
(3) கைம்மருந்து இடல்

37. தோட்டத்தில் விளையும் உணவுப் பொருளில் நச்சுத்தன்மை சேர்ந்திருப்பதற்குக் காரணமாக அமைவது
(1) பயிர்களுக்குச் சேதனப்பசளை இடல்
(2) பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பெண்ணெய்யை விசுறுதல்
(3) பயிர்களுக்கு இரசாயனப் பசளையிடல்

38. வேலையொன்றைச் செய்யும் போது பதற்றத்தையும் நேரவிரயத்தையும் தவிர்ப்பதற்கு அவ்வேலையை
(1) உரிய வேளையில் உரிய நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்.
(2) விரும்பிய ஏதேனும் ஒரு நேரத்தில் செய்து முடிக்க வேண்டும்.
(3) கடைசி நேரத்தில் அவசரம் அவசரமாகச் செய்து முடிக்க வேண்டும்.

39. தேசியக் கொடியில் காணப்படுவன,
(1) மலரிதழ்கள் (2) நெற்கதிர்கள் (3) அரச இலைகள்

40. கரப்பந்தாட்ட (வொலிபோல்) அணியொன்றில் இடம்பெறும் வீரர்களின் எண்ணிக்கை
(1) ஐந்து (2) ஆறு (3) ஏழு

41. தேசிய கீதத்தைப் பாடி முடித்ததும் செய்ய வேண்டியது,
(1) கரகோசம் செய்தல்.
(2) தலையைத் தாழ்த்தி மரியாதை செய்தல்.
(3) நின்ற இடத்தில் நின்றவாறு துள்ளுதல்.

# மைத்திரி, கோட்டாபய கொலை சூழ்ச்சியில் அரசியல் தரப்புக்கு தொடர்பு எதுவுமில்லை



## சபையில் தெரிவித்தார் அமைச்சர் சரத் வீரசேகர

கொழும்பு, செப். 23

"2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்ட அப்போதைய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் மீதான கொலைச் சூழ்ச்சியில் அரசியல்வாதிகளோ, அரசியல் கட்சிகளோ தொடர்புபட்டி ருக்கவில்லை."

- இவ்வாறு பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரி வித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட கேள்வி நேரத்தின்போது எதிர்க் கட்சி உறுப்பினர் நளின் பண்டாரவி னால், 2018 ஆம் ஆண்டில் நாமல் குமார என்பவரால் வெளியிட்ட கொலைச் சூழ்ச்சிகள் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக நாமல் குமார என்பவரால் வெளியிடப்பட்ட தகவல்கள் குறித்த விசாரணை நடவடிக்கைகளின் முன் னேற்றம் என்ன என்றும், இதனுடன் அரசியல்வாதிகள் தொடர்புபட்டுள்ள னரா என்றும் நளின் பண்டார கேள்வி எழுப்பினார். இதன்போது பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறுகையில்,

"2018ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொலை அச்சுறுத்தல் இருப்பதாக நாமல் குமார என்பவரால் வெளியிடப்பட்ட குரல் பதிவுகள் குறித்து அப்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவு பணிப்பாளராக இருந்த நாலக சில்வா கைது செய்யப் பட்டதுடன், அவர் அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சிகள் இருப்பதாக நாமல் குமார என்பவர் 2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது இது தொடர்பான அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு சட்ட ஆலோசனை களை கேட்டு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

அந்தக் கொலைச் சூழ்ச்சியில் அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகள் தொடர்புபட்டுள்ளனவா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு அரசியல்கட்சிகளோ அரசியல் வாதிகளோ அதில் தொடர்புபட வில்லை" - என்றார். (இ)

## கார் மோதி குடும்பஸ்தர் மரணம்!

குருநாகல் மாவட்டம், நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரி உல்ல வீதி - பொதுகொல்ல பகுதி யில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வீதியில் பயணித்த கார் ஒன்று அதே வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின் னால் மோதியுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கி ளைச் செலுத்திச் சென்ற கோன்வௌ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயது குடும் பஸ்தர் படுகாயமடைந்தார். அவர் உடனே நாரம்மல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந் தார். சடலம் பிரேத பரிசோதனைக் காக வைத்தியசாலை யின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதி கைதுசெய்யப்பட்டுள் ளார். சம்பவம் தொடர்பில் நாரம் மல பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## தனிமைப்படுத்தல் சட்ட மீறல்: மேலும் 491 பேர் கைது!

கொழும்பு, செப். 23

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறை களை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 491 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 55 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் நேற்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக இதுவரை தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 76 ஆயிரத்து 636 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் பொலிஸார் மற்றும் இராணு வத்தினர் இணைந்து நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் தனிமைப் படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி பயணித்த குற்றச்சாட்டில் 160 வாகனங் களில் வந்த 324 பேர் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமை யகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

## விபத்தில் இளைஞர் மரணம்!

காலி, செப். 23

காலி மாவட்டம், பிட்டிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெலவத்த வீதி, உஹன் ஓவிட்ட பிரதேசத்தில் இடம்பெற்ற விபத் தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த வீதியில் பாதுகாப்பின்றி மிக வேகமாகப் பயணித்த கப் ரக வாகனம் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளு டன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் மரணமடைந்தார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது.

மானம்பிட்டிய, ஹத்தக பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய கப் ரக வாகனத்தின் சாரதியைக் கைதுசெய்துள்ள பிட்டிகல பொலிஸார், மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

சிறுவன் சுட்டுக்கொலை:

## முக்கிய சந்தேகநபர் காட்டில் சிக்கினார்!

அம்பாந்தோட்டை, செப். 23

அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பிரதேசத்தில் கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற குழப்பம் ஒன்றின்போது 14 வயது சிறுவன் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிர தான சந்தேகநபர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

மற்றுமொரு நபருடன் காட்டுப் பகுதியொன்றில் தலைமறைவாகி இருந்த பிரதான சந்தேகநபர், வீரகெட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட் டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதான சந்தேகநபரைக் கைது செய்தபோது, கொலைக்காகப் பயன்படுத்தப்பட்டது எனக் கருதப் படும் துப்பாக்கி ஒன்றும் கைப் பற்றப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை களை வீரகெட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ)

# அரிசிக்கும் சீனிக்கும் மக்கள் நீண்ட வரிசைகளில் நிதி அமைச்சராக பஸில் வந்ததால் என்ன பயன்?

## பாராளுமன்றில் சார்ள்ஸ் எம்.பி. கேள்விக்கணை



கொழும்பு, செப். 23

"பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சரான வுடன் மக்களினதும் நாட்டினதும் சகல பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என அரச தரப்பினர் கூறினார்கள். ஆனால், பஸில் ராஜபக்ஷ நிதி அமைச்சரான பின்னர் அரிசிக்கும், சீனிக்கும் மக்கள் சதொச முன்பாக நீண்ட வரிசைகளில் மணித்தி யாலக்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டின் பொருளாதாரம் பின்தங் கிய நிலைக்குச் சென்றுள்ளது. இறக்கு மதி செய்யப்படும் சகல பொருட்களுக் கும் விலை நிர்ணயம் இல்லாது சாதா ரண மக்களுக்குப் பாரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளது. அரசு வர்த்தமானி அறிவித்தல்கள் மூலமாக விலையை நிர்ணயித்தாலும் கூட சாதாரண மக்க ளால் தாக்குப் பிடிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே, கொரோ னாத் தொற்றுக்கு மேலதிகமான நாட்டி னுடைய நிதி முகாமைத்துவம் மற்றும் பொருளாதார கொள்கைகளில் தவறு இருப்பதாகத்தான் கருத வேண்டியுள் ளது.

இந்த அரசு பதவியேற்ற பின்னர் பல அதிகாரிகள், அமைச்சினுடைய செய லாளர்கள், பணிப்பாளர்கள், மத்திய வங்கி ஆளுநர் கூட பணியாற்ற முடி யாது தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

நேர்மையான அதிகாரிகளை அரசு தமது அரசியல் சுயநலன்களுக்காகப் பயன்படுத்த முயற்சித்த வேளையில் அதற்கு இடம் கொடுக்காத அவர்களைப் பதவியில் இருந்து மாற்றும் நிலை உருவாகியுள்ளது.

நிதி அமைச்சு என்பது மத்திய வங்கி யின் ஆளுநருடன் நேரடியாகத் தொடர்பு பட்டது, ஒருபுறம் கொரோனா தாக் கத்தைச் செலுத்துகின்றது. நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளில் அரசி யல் தலையீடுகள் ஏற்படுவதனால் மக் களுக்குப் பாரிய பிரச்னைகளை எதிர் கொண்டுள்ளனர்.

பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றத் துக்கு வருவதற்கு முன்பாக ஆளுந்தரப்பு உறுப்பினர்கள், பஸில் ராஜபக்ஷ வந்தவு டன் சகல பிரச்னைகளும் தீர்ந்துவிடும் எனக் கூறினார்கள். ஆனால், அரிசிக்கும், சீனிக்கும் மக்கள் சதொச முன்பாக வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. இதனை நிதி அமைச் சர் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டில் சாதாரண மக்கள் தமக்கான அத்தியாவ சிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளச் சிரமப்படுகின்றனர். விலையேற்றம் காரணமாக சாதாரண குடும்பங்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயம் செய்ய பசளைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது. இவ்வாறு பல்வேறு பிரச்னை களுக்கு மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர்" - என்றார். (இ)



# நிலக்கரியை பயன்படுத்தும் புதிய திட்டம் இனி இல்லை!

## ஐ. நாவில் சீன ஜனாதிபதி உறுதி

நியூயோர்க், செப் 23

நிலக்கரியைப் பயன்படுத்தும் எரிசக்தி திட்டங்களை சீனாவுக்கு வெளியே இனிமேல் தொடங்கப்போவதில்லை என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

'பெல்ட் அண்ட் ரோட்' எனும் தமது மாபெரும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளுக்கு சீனா நிதியுதவி அளித்து வருகிறது. பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் உள்ள இலக்குகளை அடைய, காபன் வெளியீட்டைத் தடுக்க வேண்டும் என்பதால் சீனா மேற்கண்ட நிதியுதவியை நிறுத்த வேண்டும் என்று அழுத்தங்களைச் சந்தித்து வந்தது.

இந்நிலையில் நிலக்கரியைப் பயன்படுத்தும் எரிசக்தித் திட்டங்களை இனிமேல் சீனாவுக்கு வெளியே இனிமேல் தொடங்கப்போவதில்லை என்ற சீனாவின் அறிவிப்பு சர்வதேச அளவில் கரியமில வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் வகையான திட்டங்களுக்கு சீனா மற்ற வளரும் நாடுகளுக்கு ஆதரவை அதிகரிக்கும். மேலும் வெளிநாடுகளில் புதிய நிலக்கரி மின்சக்தி திட்டங்களை உருவாக்காது எனவும் ஐ.நாவில் பேசிய ஜி ஜின்பிங் கூறினார். (ஐ)



# தவறான திசையில் பயணிக்கிறோம் உலகம் உடனடியாக விழிக்கவேண்டும்

## ஐ. நா. பொதுச் செயலாளர்

நியூயோர்க், செப். 23

உலகம் உடனடியாக விழித்துக் கொள்ளவேண்டும். நாம் இப்போது பெரும் பள்ளத்தின் விளிம்பில் இருப்பதுடன் தவறான திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்டரெஸ் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்.

உலகம் கோவிட் - 19 வைரஸ் தொற்றுப் பரவலைக் கையாண்ட விதத்தைப் பொறுத்தவரையில், நாம் அறிவியல் தேர்வில் தேர்ச்சியடைந்திருக்கின்றோம். ஆனால், அடிப்படை நெறிமுறைகளில் தோல்வியடைந்திருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

ஐ. நா. பொதுச்சபையின் 76 ஆவது கூட்டத்தொடரின் அரச தலைவர்கள் மாநாடு நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் ஆரம்பமானது. உலகத் தலைவர்கள் மத்தியில் மாநாட்டை தலைமையேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செல்வந்த நாடுகளில் பெருமளவானோருக்கு கோவிட் - 19 தடுப்பூசி வழங்கப்பட்டதிலும், ஆபிரிக்கர்களில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் இன்னமும் முதலாம் கட்டத் தடுப்பூசிக்காகக் காத்திருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டிய அவர், பல்வேறு சவால்கள் காணப்படுகின்றபோதிலும் கடந்த இரு வருடகாலத்தில் அடைந்து கொண்ட வெற்றியைக் கொண்டாடுவதற்கு சில நிமிடங்களேனும் ஒதுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

### பனிப்போரை உருவாக்க முயலவில்லை!

# அமைதி வழியிலான எந்த நாட்டுடனும் நாங்கள் இணைந்து செயல்பட தயார்!

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்



நியூயோர்க், செப். 23

பிளவுபட்ட உலகில் மீண்டும் ஒரு புதிய பனிப்போரை உருவாக்க நாங்கள் முயற்சிக்கவில்லை. அமைதியை பின்பற்றும் எந்த நாட்டுடனும் இணைந்து பணியாற்ற அமெரிக்கா தயாராக உள்ளது இவ்வாறு கூறியிருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்.

ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நமது பாதுகாப்பு, வளர்ச்சி, சுதந்திரம் ஆகியவை ஒன்றோடு ஒன்று இணைந்தவை. இதற்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் நாம் இணைந்து செயல்பட வேண்டும். நாம் இன்று பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறோம்.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டு கால பிரச்சினையை நாம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளோம். இந்த போரை முடிவுக்கு கொண்டு வந்துள்ள நாம் அங்கு வெளியுறவு கொள்கை என்ற கதவுகளை திறந்துள்ளோம்.

ஆயுதங்கள் கொரோனா வைரஸை வீழ்த்தாது. ஒருங்கிணைந்த அறிவியல் மற்றும் அரசியல் சக்திகளால் கொரோனாவை வீழ்த்தலாம். சிகிச்சைக்கான வசதிகளை விரிவுபடுத்தி உலகிலுள்ள உயிர்களை காக்க வேண்டும். எதிர்காலத்தில் உலக சுகாதார பாதுகாப்புக்கான நிதிக்காக புதிய நடைமுறைகளை நாம் உருவாக்க வேண்டும் - என்றார். (ஐ)

### தலிபான் பிரதிநிதித்துவ விவகாரம்!

# சார்க் அமைச்சர்கள் கூட்டம் நிறுத்தப்பட்டது!

புதுடில்லி, செப். 23

சார்க் அமைப்பில் தலிபான்களையும் பிரதிநிதிகளாக ஏற்குமாறு பாகிஸ்தான் வலியுறுத்தியதை அடுத்து வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நிறுத்தப்பட்டது.

தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் அமைப்பில், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான் மாலைதீவு என 8 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் எதிர்வரும் செப். 25ஆம் திகதி நடைபெற இருந்தது.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானின் பிரதிநிதியாக தலிபான்களை ஏற்குமாறு பாகிஸ்தான் முன்மொழிந்தது. இதற்கு இந்தியா உள்ளிட்ட நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. இதைத் தொடர்ந்து வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நிறுத்தப்பட்டது. (ஐ)

# முகக்கவசம் அணியுமாறு கூறியவர் சுட்டுக்கொலை!

பெர்லின், செப். 23

முகக்கவசம் அணியுமாறு வலியுறுத்திய எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரான இளைஞரை வாடிக்கையாளர் சுட்டுக் கொலை செய்த சம்பவம் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜேர்மனியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவமே கொரோனா கட்டுப்பாட்டால் ஏற்பட்ட முதல் வன்முறை சம்பவமாக பதிவாகியுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

ஜேர்மனியின் இடார் ஓபர்ஸ்டீன் என்ற இடத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்துடன் இணைந்ததாக மதுபான விற்பனை நிலையமும் உள்ளது. அங்கு வந்த ஒருவர் பியர் தருமாறு கேட்டுள்ளார். அவர் முகக் கவ சம் அணியாதமையால், முகக் கவசம் அணிந்து வரு மாறு ஊழியரான 20 வயது இளைஞர் கூறியுள்ளார். இதைத் தொடர்ந்து இருவரிடையேயும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அங்கிருந்த சென்ற வாடிக்கையாளர் முகக்கவசம் அணிந்து வந்து பியர் வாங்கியுள்ளார். அதன் பின்னர் முகக் கவசத்தை கழற்றி விட்டு, முகக்கவசம் அணியுமாறு கூறிய இளைஞருடன் முரண்பட்டுள்ளார். பின்னர், மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து இளைஞரின் தலையில் சுட்டுக் கொன்றுள்ளார்.

இதன் பின்னர், பொலிஸ் நிலையத்துக்கு சென்று தான் கொலை செய்து விட்டார் என்றும், கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தினமும் தனது உரிமை களை அத்துமீறுவதாக இருந்து நெருக்கடி தந்தன. இதனால், அந்த அழுத்தத்தில் இருந்து விடுபட, தனது உரிமைகளில் தலையிட்ட ஒருவரை தான் சுட்டுக் கொன்றார் என்று 49 வயதான அந்த நபர் கூறியி ருக்கிறார்.

இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியையும் - ஜேர்மனியில் கட்டுப்பாடுகளுக்கு எதிரான மனநிலையையும் மக்களிடையே அதிகரித்துள்ளது. (ஐ)



# இந்தோ-பசுபிக்கில் பிரான்ஸுடன் கைகோக்க தயாராகிறது இந்தியா

## மக்ரோனுடன் மோடி உரையாடல் நீர்மூழ்கிகளை இந்தியா வாங்கும்?

பாரிஸ், செப். 23

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் பிரான்ஸுடன் வெளிப்படையாகவும் உள்ளார்ந்த விதத்திலும் நெருங்கி செயல்படுவதற்கு இந்தியா தனது விருப்பத்தை வெளியிட்டிருக்கிறது.

பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடலில் பசுபிக்கில் இரு நாடுகளும் கைகோத்து செயல்படுவதற்கு பரஸ்பரம் தங்கள் விருப்பங்களைப் பரிமாறியுள்ளனர் - எனத் தகவல் வெளியாகியிருக்கிறது.

பிரான்ஸுடனான நீர்மூழ்கி ஒப்பந்தத்தை திடீர் என்று முறித்துக்கொண்டதால் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய முத்தரப்புகளுடனான பாரிஸின் உறவுகள் பெரும் நெருக்கடியான கட்டத்தில் உள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மக்ரோனும் மோடியும் தொலைபேசி வழியாக உரையாடி இருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

இரு தலைவர்களின் உரையாடலுக்குப் பின்னர் எலிஸே மாளிகை வெளியிட்ட தகவலில், நம்பிக்கை மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப்படையிலான நெருங்கிய உறவின் ஒரு பகுதியாக இந்தியாவின் தொழில் மூலோபாயத் தன்னாதிக்கத்தை வலுப்படுத்த பிரான்ஸ் முழு ஆதரவை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி உரையாடலுக்குப் பின்னர் பிரதமர் மோடி வெளியிட்ட ருவிற்றர் பதிவு ஒன்றில் மக்ரோனைத் தனது நண்பர் என்று (my friend) குறிப்பிட்டு எழுதியுள்ளார். "பிரான்ஸுடனான தனது மூலோபாயப் பங்களிப்புக்கு இந்தியா உயர்ந்த இடமளித்துள்ளது" என்றும் மோடி தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பிரான்ஸுடன் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத்தை அவுஸ்திரேலியா முறித்துக் கொண்டுள்ள பின்னணியில் புதியதோர் ஒப்பந்தம் ஊடாக அந்த நீர்மூழ்கிகளை இந்தியா வாங்கக் கூடும் என்ற ஊகங்களை இந்திய ஊடகங்கள் வெளியிட்டிருக்கின்றன. (ஐ)




# 20,000 ஓட்டங்கள் கடந்தார் மிதாலி!

மெல்பர்ன், செப். 23

மகளிர் கிரிக்கெட் போட்டியில் 20 ஆயிரம் ஓட்டங்களை குவித்து சாதனை படைத்துள்ளார் இந்திய வீராங்கனை மிதாலி ராஜ்.

அவுஸ்திரேலியாவில் அந்த நாட்டு மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் இந்திய மகளிர் அணி விளையாடி வருகின்றது.

இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டியில் 63 ஓட்டங்களை மிதாலி ராஜ் எடுத்தார். இதன் மூலமே 20 ஆயிரம் ஓட்டங்களை அவர் பெற்றார். 38 வயதான மிதாலி ராஜ் மூவகை கிரிக்கெட் போட்டிகளிலுமே இந்த ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளார்.

1999ஆம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் அறிமுகமான மிதாலி ராஜ், ராஜஸ்தானின் ஜோத்பூரில் பிறந்தார். கர்நாடாகாவின் ஹைதராபாத்தில் வளர்ந்த அவர் பூர்வீகத்தால் தமிழர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## லா லிகா உதைபந்தாட்டம்

# பார்ஸி.-கிரானடா மோதல் சமநிலையில் முடிவடைந்தது!

மட்ரிட், செப். 23

பார்ஸிலோனா - கிரானடா அணிகளின் மோதல் 1 - 1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

லா லிகா உதைபந்தாட்ட போட்டி ஸ்பெயினில் நடக்கிறது. தற்போதைய நிலையில் புள்ளிகள் பட்டியலில் பார்ஸிலோனா 4 போட்டிகளில் 2 வெற்றிகள் பெற்று 8 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் உள்ளது. கிரானடா 5 போட்டிகளில் ஒரு வெற்றி கூட பெறாமல் 3 புள்ளிகளுடன் 17ஆவது இடத்தில் உள்ளது.

இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து அந்த அணியின் ரொனால்ட் கோமேன், தலைவர் ஜோவான் லபோர்டா ஆகியோருக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.

மட்ரிட் நகரில் நடந்த இந்தப் போட்டியில் இரண்டாவது நிமிடத்திலேயே கோல் அடித்தது கிரானடா அணி. அந்த அணியின் எஸ்குடேரோ பந்தை கோல் கம்பத்தின் இடதுபுறமாக கடத்தி வந்து அருமையாக இடது பக்கமாக உயர்த்தி அடித்தார். அந்தப் பக்கத்தில் நின்றிருந்த சக வீரர் டோமிங்கோஸ் டுவார்தே தன்னிடம் வந்த பந்தை தலையால் முட்டி கோலடித்தார்.

முதல் பாதி முடிவடையும் முன்பாக பார்ஸிலோனாவுக்கு இரண்டு நல்ல சந்தர்ப்பங்கள் வாய்த்தும் கோட்டை விட்டது. எனினும்,போட்டி முடிவடையும் தறுவாயில் - 90ஆவது நிமிடத்தில் காவி தூக்கி உதைத்து உயர்த்தி அப்படியே தலையால் முட்டி கோலடித்தார். அராஜோ. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ஐ)

## ஐ. பி. எல். இருபது - 20 தொடர்

# ராஜஸ்தான் ‘த்ரில்’ வெற்றி!

டுபாய், செப். 23

பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் ராஜஸ்தான் அணி இரண்டு ஓட்டங்களினால் ‘த்ரில்’ வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு டுபாயில் நடந்த 32ஆவது போட்டியில், சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் கே. எல். ராகுல் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் ஆகிய அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் கிங்ஸ் அணி முத லில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் வீரர்களின் தொடர்ச்சி யான அதிரடி ஆட்டத்தினால் 20 ஓவர்கள் நிறைவில் 185 ஓட்டங்களை குவித்தது அந்த அணி.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய எவின் லூயிஸ் 21 பந்துகளில் ஒரு சிக்ஸர், 7 பௌண்ட்ரிகள் அடங்க லாக 36 ஓட்டங்களையும், ஜெய்ஸ் வால் 36 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களை பெற்றனர். நடுவரிசை வீரர்களான லியாம் லிவிங்ஸ்ரன் 17 பந்துகளில் 25 ஓட்டங்களையும், மஹிபால் லோமோர் 17 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக 43 ஓட்டங்களை அதிரடியாக குவித்தனர்.

பஞ்சாப்பின் பந்துவீச்சில், அர்ஷ்தீப் சிங் 5 விக்கெட்களையும், மொஹமட் ஷமி 3 விக்கெட்களையும், இஷான் போரல் மற்றும் ஹர் பிரீத் பிரார் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

186 ஓட்டங்களை நோக்கி அதி ரடியாக துடுப்பெடுத்தாடியது பஞ்சாப் அணி. தொடக்கம் கொடுத்த கே. எல். ராகுல், மயங்க் அகர்வால் இணை சிறப்பாக ஓட் டங்களை குவித்தனர். ராகுல் 33 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளுடன் 49 ஓட்டங் களையும், மயங்க் அகர்வால் 43 பந்துகளில் 2 சிக்ஸர்கள் 7 பௌண்ட்ரிகளுடன் 67 ஓட்டங்களையும் குவித்தனர்.

இவர்கள் முதல் விக்கெட்டுக் காக 120 ஓட்டங்களை சேர்த்தனர். இதன் மூலம், நான்காவது முறை யாக 100 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்த இணை என்ற பெருமையை இவர்கள் பெற்றனர்.

ஆனால், பின்னர் வந்த வீரர்கள் பெரிதாக சோபிக்க



வில்லை. மார்க்ரம் 26, பூரண் 32 ஓட்டங் களையே பெற்றனர். எனினும் மெதுவான துடுப்பாட்டத்தால், பஞ்சாப் அணி 20 ஓவர்கள் நிறை வில் அந்த அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 183 ஓட்டங்களையே பெற்றது.

இதனால், 2 ஓட்டங்களால் ராஜஸ்தான் அணி த்ரில் வெற்றி பெற்றது.

ராஜஸ்தானின் பந்துவீச்சில் கார்த்திக் தியாகி 2 விக்கெட்களையும் சேட்டன் சக்கரியா, ராகுல் தெவாட்டியா தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக கார்த்திக் தியாகி தெரிவானார். (ஐ)

# ராஜஸ்தானின் சாம்சனுக்கு ரூ. 32.4 இலட்சம் அபராதம்!

டுபாய், செப். 23

தாமதமாக பந்துவீசியமைக்காக ராஜஸ்தான் அணியின் தலைவர் சஞ்சு சாம்சனுக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 32.4 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பஞ்சாப் - ராஜஸ்தான் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் 185 ஓட்டங்களை சேர்த்தது. 186 ஓட்ட இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது பஞ்சாப். இதன்போது, ராஜஸ்தான் அணியினர் தாமதமாகப் பந்துவீசினர். இறுதியில், இரு ஓட்டங்களால் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது.

தாமதமாகப் பந்துவீசியமைக்காகவே ராஜஸ்தானின் தலைவருக்கு 12 இலட்சம் இந்திய ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.







# நடராஜனுக்கு கொரோனா!

டுபாய், செப். 23

ஐ. பி. எல். தொடரில் ஹைதராபாத் அணிக்காக விளையாடும் நடராஜனுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. எனினும், நேற்று நடக்க விருந்த டில்லி கப்பிட்டல்ஸ், ஹைதரா பாத் சன்ரைசர்ஸ் மோதிய போட்டியை இது பாதிக்கவில்லை.

ஹைதராபாத் அணியின் ஏனைய வீரர்களுக்கு நடத்தப்பட்ட சோதனை யில் தொற்று இல்லை என்று உறுதிப் படுத்தப்பட்டமையாலேயே போட்டியை தொடர்ந்து நடத்த முடிவு செய்யப்பட்டது. இதேவேளை, நடராஜனுடன் நெருங்கிப் பழகிய 6 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# யாழ்.பல்கலைக்கழக பொது பட்டமளிப்பு ஒக்.7 நிகழ்நிலையில் நடத்த மாணவர்களும் இணக்கம்

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி அறிவிக்கப்பட்டபடி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07ஆம் திகதி நிகழ்நிலை வாயிலாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் இதனைத் தெரிவித்தார்.

பட்டமளிப்பு விழாத் தொடர்பில் தீர்மனங்களை இயற்றுவதற்காக நேற்று நண்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாக்குழுவின் விசேட கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு விபரிக்கும்போதே கலாநிதி கே. சுதாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவரிப்பின் போது பல்கலைக்கழப் பதிவாளர் வி. காண்டீபன், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ்உமேஸ் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் 07 ஆம், 08 ஆம், 09 ஆம் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என்றும், நாட்டில் இப்போதுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின் அதனை ஒக்ரோபர் 07ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்த வாரம் யாழ். பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவதற்குச் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கவில்லை. இதனால் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி மாணவர்களுக்கான பட்டங்கள் உறுதிப்படுத்தப்படுத்துவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

நிகழ்நிலைப் பட்டமளிப்புக்குத் தங்கள் இணங்கவில்லை என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதையடுத்து துணைவேந்தரின் வேண்டுகோளுக்கமைய மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் உள்வாங்கி பட்டமளிப்பு விழாக் குழுவின் விசேட கூட்டம் நேற்று கூட்டப்பட்டிருந்தது.



கூட்டத்தின் முடிவில் எதிர்வரும் ஒக்ரோபர் 07ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதி செய்வது என்றும், தற்போதைய நிலைமைகள் சீரடைந்ததும் மரபு ரீதியான பட்டமளிப்பு வைபவத்தை மிகக் குறுகிய காலத்தினுள் நடத்துவதற்கான திகதியை முன்மொழிவதற்கென மாணவர் பிரதிநிதிகளையும், பல்கலைக்கழக அலுவலர்களையும் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழுவினால் முன்மொழியப்படும் திகதிகளில் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கென சுகாதார சேவைகள் திணைக்கள அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் இதே குழு மேற்கொள்ளவுள்ளது என்றும் கலாநிதி கே. சுதாகரன் மேலும் கூறினார். (இ - 03)

## டிப்பர் மோதி குடும்பஸ்தர் மரணம்!

கிண்ணியா, செப். 23

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்லகமுவ கிண்ணியா வீதி, வில்வெளி பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

டிப்பர் ரக வாகனம் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபர் மரணமடைந்தார். விபத்தில் படுகாய மடைந்தவர் கிண்ணியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த விபத்தில் டிப்பர் ரக வாகனத்தின் சாரதியும் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 23 - 02 - 1961



உதிர்வு 21 - 09 - 2021

### திருமதி தர்மலிங்கம் லீலாவதி

வசாவிளான் திடற்புலத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் அரசடியை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் லீலாவதி அவர்கள் 21.09.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற மாரிமுத்து -லட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், வீரன் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரன் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், தர்சினி (ஜேர்மனி), விதுரன், வேணுகா, தனரூபி, சுபேஸ், திவ்யா ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற ராணி, ரத்தினம், ரத்தினசிங்கம், சரஸ்வதி, கமல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெகிந்தராசு(ஜேர்மனி), தர்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தெய்வநாயகி, சுபத்திரா, சந்திரா, சாந்தி, தெய்வேந்திரன், காலஞ்சென்ற கிளி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சாதுகா, தாருகா, தீபிகா, அனாமிகா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு:
**முகுந்தன் (மருமகன்)**
**+4917697798505**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மதுபான விற்பனை நிலையங்களை திறந்து

# வீடுகளில் சேமித்து வைத்திருந்த பணத்தை சுரண்டி எடுத்தது அரசு

## கடுமையாக சாடுகின்றது சஜித் அணி



**கொழும்பு, செப்.23**

**பால்மா, உணவுப் பொருட்களுக்காகச் சேமித்து வைத்திருந்த பணத்தை, மதுபான விற்பனை நிலையங்களைத் திறந்து அரசு சுரண்டி எடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

"அரசுக்கு வருமானம் இல்லாத காரணத்தால் கலால் வரியைப் பெற்றுக்கொள்வதற்காகவே மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதனூடாக வீடுகளில் உள்ள தாய்மார் பல்மா, உணவுப் பொருட்களை வாங்குவதற்காகச் சேமித்து வைத்திருந்த பணத்தை அரசு தமது வருமானத்துக்காகச் சுரண்டி எடுத்துள்ளது.

பால்மா, அரிசிக்குத் தட்டுப்பாடுகள் நிலவும் நிலையில் பால்மா விலையை அதிகரித்தனர். மதுபானசாலைகள் திறக்கப்பட்டதால் ஆண்கள் வீடுகளில் உள்ள தாய்மார் சேமித்து வைத்திருந்த பணத்தை பறித்தெடுத்து வந்து அரசுக்குக் கொடுத்துள்ளனர்" - என்றார். (இ)

## வவுனியாவில் மேலும் 69 பேருக்கு கொரோனா; நால்வர் உயிரிழப்பு!

வவுனியா, செப். 23

வவுனியா மாவட்டத்தில் மேலும் 69 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், 4 பேர் மரணமடைந்தார் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றுக் காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிக்குளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 69 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் மேலும் 4 பேர் மரணமடைந்துள்ளனர். நெடுங்கேணி பகுதியில் ஆண் ஒருவரும் (வயது 39), பட்டக்காடு பகுதியில் ஆண் ஒருவரும் (வயது 49), பம்பைமடு காப்பகம் ஒன்றில் ஆண் ஒருவரும் (வயது 79), உக்குளாங்குளம் பகுதியில் பெண் ஒருவரும் (வயது 71) இவ் வாறு மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். (இ)

## பொறுப்புக்கூறல்,...

இவ்வாறு ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) பொதுச் சபை அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுச் சபை கூட்டத்தில் நேற்று ஜனாதிபதி இரவு 9.45 மணியளவில் (இலங்கை நேரம்) உரையாற்றினார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தொற்றுப் பரவலால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்னை, விசேடமாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு, மேலும் பல சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. இது, 2030இல் அடைய எதிர்பார்த்திருக்கும் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான நிகழ்ச்சி நிரலைச் செயல்படுத்துவதற்கு பாதகமாக அமைந்திருக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள், இவ்வாறான நிலையற்ற தன்மையிலிருந்து மீள்வதற்காக, சர்வதேச பொறிமுறையொன்றின் ஊடாக அபிவிருத்திக்கான நிதி மற்றும் கடன் சலுகை உள்ளிட்ட மேலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது அத்தியாவசியமாகியுள்ளது.

தொற்றுப் பரவல் காரணமாக, இலங்கை கடுமையான சிரமத்துக்கு உள்ளாகியுள்ளது. சோகமயமான உயிரிழப்புகளுக்கு மேலதிகமாக, எங்களுடைய பொருளாதாரத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தொற்றுப் பரவலால் ஏற்பட்ட நேரடிப் பிரச்னைகளுக்கு மேலதிகமாக ஏற்பட்ட பொருளாதாரப் பிரச்னைகளானவை, எங்களுடைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக இருந்த நிதியின் இருப்பைச் சீர்க்குலைய வைத்தன. தொற்றுப்பரவலின் விளைவுகள், மனித குலத்துக்கு மிகவும் அழிவுகரமானவையாக அமைந்தன. இவற்றை விட மிக மோசமான விளைவுகளை, காலநிலைப் பிரச்னைகள் ஏற்படுத்தக்கூடும். அதனால், எதிர்வரும் சில தசாப்தங்களுக்குள் இந்த உலகம், பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

இந்தப் பூமியின் ஆரோக்கியத்துக்கு, முன்னர் இல்லாதளவில் மேற்கொள்ளப்படும் மனித செயல்பாடுகள் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றன என்று, காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்கள் மற்றும் பல்லுயிர்ப் பரம்பல் இல்லாமல் போவதால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்குத் தீர்வு காண்பதற்காக, தீர்க்கமானதும் உடனடியானதுமான பலதரப்பு நடவடிக்கையொன்றின் தேவை அவசியமாகியுள்ளது.

காலநிலை மாற்றங்களுக்கு இலக்காகும் ஒரு நாடாக, அதில் உள்ள அபாயங்கள் குறித்து இலங்கை நன்கு அறிந்திருக்கிறது. 2030ஆம் ஆண்டுக்குள், நைதரசன் கழிவுகளின் அளவை அரைவாசியாக குறைக்க எதிர்பார்த்திருப்பதோடு, 'நிலையான நைதரசன் முகாமைத்துவம் பற்றிய கொழும்பு சாசனத்தை நிறைவேற்றிக் கொண்டதன் மூலம், சுற்றுச்சூழல் மாசடைவைக் கட்டுப்படுத்தி, உலகளாவிய முயற்சிகளுக்கு, இலங்கையும் பங்களிப்பு நல்கியுள்ளது.

தவிர, நாடு முழுவதிலும் காணப்படும் 100 ஆறுகளுக்கும் மேலானவற்றைச் சுத்தம் செய்து மீட்கவும் ஆறுகள் மற்றும் சமுத்திர மாசுபடுத்தலுக்கு எதிராக நிற்கவும், நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஆதரவாக, ஒருமுறை உபயோகிக்கும் பிளாஸ்ரிக் பயன்பாட்டுக்கும் தடைவிதித்துள்ளோம். எம்முடைய மின்சக்தி கொள்கையின் ஊடாக, 2030ஆம் ஆண்டுக்குள், எமது தேசிய மின்சாரத் தேவையின் 70 சதவீதத்தை, சூரியசக்தி, காற்றாலை மற்றும் நீர் போன்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வலுக்களினூடாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

எமது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செயல்படுத்தும் போதும், சர்வதேச சமூகத்தினரின் ஒத்துழைப்பை இலங்கை அன்புடன் வரவேற்கிறது. முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வர்த்தகத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும், எமது நாட்டின் அமைவிடம் மற்றும் எங்களுடைய வலுவான நிறுவனங்கள், வலுவான சமூக உட்கட்டமைப்பு மற்றும் திறமையான பணியாளர்களை அதிகளவில் பயன்படுத்த எதிர்பார்த்திருக்கிறோம். இதற்கான வசதிகளை வழங்குவதோடு, எமது மக்கள் அனைவரையும் வளப்படுத்துவதற்கான நீதி, ஒழுங்கு, நிர்வாகம் மற்றும் கல்வி போன்ற துறைகளையும் விரிவுபடுத்தி, விரிவான சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள, எனது அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

2019ஆம் ஆண்டில், அடிப்படைவாத மதவாதத் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களையும் இலங்கை எதிர்கொண்டது. அதற்கு முன்னர், அதாவது 2009ஆம் ஆண்டு வரையில், சுமார் 30 வருடங்களாக இலங்கையில் யுத்தம் நிலவியது. பயங்கரவாதம் என்பது, உலகளாவிய அச்சுறுத்தல் என்பதோடு, அதனை வெற்றிகொள்ள வேண்டுமாயின், விசேடமாகப் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு, சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அத்தியாவசியமாகின்றது. கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில், இலங்கையில் ஆயிரக்கணக்கான உயிர்களும் பல தசாப்தங்களுக்குரிய செழிப்பும் இழக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற வன்முறைச் செயல்கள் இலங்கையில் மீண்டும் நடக்காது என்பதை உறுதி செய்வதில் எனது அரசு உறுதியாக உள்ளது. அதனால், அவற்றின் பின்னால் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். நீடித்த சமாதானத்தை நாட்டுக்குள் ஏற்படுத்திக்கொள்ள, தேசிய நிறுவனங்களினூடான பொறுப்புக்கூறல், மறுசீரமைக்கப்பட்ட நீதி மற்றும் அர்த்தமுள்ள நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

பொருளாதார அபிவிருத்தியின் பிரதிபலன்களுக்காக, நியாயமான பங்கேற்பை உறுதி செய்வதிலும் உண்மையாக இருக்க வேண்டும். இனப் பாகுபாடு, மதம் மற்றும் பாலின வேறுபாடுகளின்றி, அனைத்து இலங்கையர்களுக்கும் வளமானதும் நிலையானதும் பாதுகாப்பானதுமான எதிர்காலத்தை உருவாக்குவதே, என்னுடைய அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்தச் செயல்பாட்டுக்காக, அனைத்து உள்ளூர் பங்குதாரர்களுடன் இணைந்து, சர்வதேசப் பங்குதாரர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தயார்.

எவ்வாறெனினும், மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் உள்ளூர் நிறுவனங்கள் மூலம் மட்டுமே நிலையான முடிவுகளைப் பெறமுடியுமென்பதை வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. இலங்கையின் பாராளுமன்றம், நீதித்துறை மற்றும் சுயாதீன சட்டரீதியான அமைப்புகள், தங்கள் செயல்பாடுகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற வரம்பற்ற இடத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இறையாண்மையுடன் கூடிய அனைத்து அரசாங்கங்களினது அளவையும் வலிமையையும் பொருட்படுத்தாமல், நியாயமான முறையில் கருதி, அவர்களின் வழிமுறைகள் மற்றும் பாரம்பரியத்துக்கு உரிய மரியாதையுடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது, ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பாக இருக்கின்றது - என்றார். (ஐ)

## கொரோனா...

ரிழந்துள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12,376 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன் தினம் உயிரிழந்தவர்களில் 41 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு...

சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்புக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இக்குழு இணங்கியது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமை வகிக்கும் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழு நேற்று புதன்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் கூடியதுடன், இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான (மேஜர்) பிரதீப் உந்துகொட, சார்ள்ஸ் நிர்மலநாதன், டிரான் அலஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குடிவரவு -குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஜெனரல் சரத் ரூபசிறி உள்ளிட்ட அதிகாரிகள் காணொலி தொழில்நுட்பத்தின் ஊடாக இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சட்டமூலத்துக்கு அமைய 1984ஆம் ஆண்டு 20ஆம் இலக்க குடிவரவு குடியகல்வுச்சட்டத்தின் 14வது சரத்து திருத்தத்துக்கு உள்ளாகவிருப்பதுடன், தற்பொழுது வீசாஅனுமதியை வழங்கக்கூடிய கால எல்லையான 2 வருடங்களை 5 வருடங்கள் வரை அதிகரிப்பதே இத்திருத்தத்தின் ஊடாக முன்னெடுக்கப்படும் என குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஜெனரல் சரத் ரூபசிறி இங்கு தெரிவித்தார்.

அத்துடன்,அமைச்சரின் கட்டளைக்கு அமைய வீசா வழங்கும் காலத்தை 5வருடங்களிலிருந்து 10 வருடங்கள் வரை மேலும் அதிகரிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மது அருந்தும்...

பிறந்தநாள் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற இளைஞர்கள் சிலரிடையே மதுபானம் அருந்துவதில் போட்டி ஏற்பட்டது. போத்தலில் இருந்து வாயெடுக்காமல் யார் அதிக மதுபானம் அருந்துவது என்று ஏற்பட்ட அந்தப் போட்டியில் மதுபானம் புரைக்கேறியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று கூறப்படுகின்றது.

ஆனால், உயிரிழந்தவரின் உறவினர்கள் இதில் சந்தேகம் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இளைஞரை அதிக மதுபானம் அருந்தச் செய்து கொல்லப்பட்டார் என்று அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

உயிரிழந்தவருக்கு நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையில் அவருக்கு கொரோனா தொற்றியிருந்தமையும் உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## கூட்டமைப்புடன்...

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோது மேற்கண்டவாறு கூறிய அவர்மேலும் தெரிவிக்கையில்,

'2009 மே 26 ஆம் திகதி பான் கீ மூன் இலங்கை வந்திருந்த போது அவருடன் மஹிந்த ராஜபக்ஷ இணைந்து கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதே போன்றே தற்போது கோட்டாபய ராஜபக்ஷவும் கூறுகின்றார். இவர் இப்படி கூறுகையில், நாங்கள் வெளியக பொறிமுறையை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார். இது இரண்டுவிதமான பேச்சு.

இந்நிலையில், புலம்பெயர் தமிழர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளமையை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், இந்த வருடம் ஜூலை மாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பேச் சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இறுதி நேரத்தில் அது நடத்தப்பட வில்லை. நாங்கள் இரண்டு மாதங்களாக அதற்காக காத்திருக்கின்றோம். ஆனால் இலங்கையில் தமிழ் மக்களின் பிரதிநிதி களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டன் பேச மறுக்கும் ஜனாதிபதி, நியூயோர்க்கில் இருந்து கொண்டு புலம்பெயர் தமிழர்களை பேச அழைப்பது வேடிக் கையானது அவர் கட்டாயம் எங்களு டன் பேச வேண்டும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இங்கே இருக்கின்றார்கள்" என்றார்.

## வடக்கில் நேற்று...

கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 25 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வு கூட முடிவின் பிரகாரம்,

யாழ்.மாவட்டத்தில் 24 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருவரும், வவுனியா மாவட்டத்தில் 8 பேரும், மன்னார் மாவட்டத்தில் இருவரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். (ஐ)

## ஜனாதிபதியின்...

களை தீர்த்துக்கொள்வதற்காக கலந்துரையாட வருமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு ஐ.நா.வில் வைத்து ஜனாதிபதி அழைப்பு விடுப்பது வெற்றுப் பேச்சே என்று என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் கூறியவை வருமாறு,

கடந்த 19 ஆம் திகதி நியூயோர்க் நகரில், ஐ.நா. செயலாளரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்த போது, உள்ளக பொறிமுறையில் பிரச்னைகளை தீர்த்துக் கொள்வதற்காக கலந்துரையாட வருமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சிறிது காலத்தில், பல எண்ணிக்கையிலான புலம்பெயர் அமைப்புகளை தடை செய்தது. இவ்வாறாக தடை செய்து விட்டு ஐ.நா.வுக்கு செல்லும் போது இவ்வாறு கூறுகின்றனர். இது முழுமையான வெற்றுப் பேச்சே.

இதேவேளை காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழை வழங்குவதற்காக நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி கூறுகின்றார். அப்படியானால் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலை ஜனாதிபதி வழங்க வேண்டும். அதே போன்று ஆட்சிக்கு வந்த பின்னர் பல தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ததாக கூறியுள்ளார். தண்டனைக் காலம் முடிவடையவுள்ளவர்களே அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இவ்வாறான அறிவித்தல்கள் சர்வதேசத்திற்கு ஜனாதிபதி வழங்கும் வெற்றுப் பேச்சுகளாகவே இருக்கும் என்றார்.

## நாகர்கோவில்...

தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஈகைச் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் திகதி நண்பகல் 12. 30 மணியளவில் மாணவர்கள் தமது பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேளை இலங்கை விமானப் படையின் புக்காரா விமானம் நடத்திய குண்டு வீச்சில் 21 மாணவர்கள் பலியாகினர். இதன் போது 18 பொது மக்களும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ரூ. 40,000 கோடி...

சத்து 93 ஆயிரத்து 700 கோடி ரூபாயாக அதிகரித்து ஒதுக்கீட்டு சட்டத்தை திருத்த நிதியமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கோவிட் பெருந்தொற்று மேலெழுந்துள்ள நிலைமையில், அரச வருமானம் இழக்கப்பட்டமையினால் சம்பளம் மற்றும் ஏனைய செலவுகளுக்கான மேலதிக நிதியினை ஒதுக்கீடு செய்ய வேண்டி ஏற்பட்டதாலும் இதர துறைகளில் செலவுகள் அதிகரித்தமையாலும் 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லையை அதிகரிக்க நேரிட்டுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu




# தரவுகள் மாயமானவை பற்றி உரிய விசாரணை வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் வலியுறுத்து

கொழும்பு, செப்.23



**தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகள் காணாமல்போயுள்ளமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன எனவும், இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதி விசாரணைகள் இடம்பெறவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.**

பாராளுமன்றத்தில் நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வி எழுப்பி உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு வலியுறுத்தியதுடன் மேலும் கூறுகையில்,

“தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்குரிய மிக முக்கியமான சுமார் 11 இலட்சம் தரவுக் கோவைகள் காணாமல்போயுள்ளன. அதன் முழுப் பொறுப்பையும் ஒரு தனியார் நிறுவனத்தின் கணினி இயக்குநரின் கை தவறுதால் நடந்தது எனத் தெரிவித்து அதனை நலினப்படுத்துவதன் மூலம் நாட்டு மக்களின் பாதுகாப்பு கடுமையான அவதானமிக்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

பல்வேறு தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய அனுமதியை வழங்கியுள்ளமை, மருந்துகளைக் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கியுள்ளமை குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள இக்காலப் பகுதியில் இவ்வாறானதொரு சம்பவம் ஏற்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக கருத்தி விசாரணைகள் இடம்பெற வேண்டும்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகள் காணாமல் போயுள்ளமை ஒரு சதித்திட்டம் என்று உதவி சொலிஸ்டர் ஜெனரல் கூறியுள்ளார். மருந்து மாபியாக்களால் திட்டமிட்டு இந்தச் சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் குற்றச்சாட்டுக்கள் உள்ள நிலையில் இது குறித்து அரசு உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ள விடயங்களை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்” - என்றார். (இ)

# மூத்த ஊடகவியலாளர் அந்தோனி காலமானார்

மன்னார், செப். 23



மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரும் தமிழ்த் தேசியப் பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க் தனது 80 ஆவது வயதில் காலமானார்.

திடீர் சுகயீனம் காரணமாக முல்லைத்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார். அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

மூத்த ஊடகவியலாளர் பீ.ஏ.அந்தோனி மார்க் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

குரலற்ற மக்களின் குரலாகவும் குறிப்பாக காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்காகவும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக் காகவும் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்ததோடு, பல்வேறு போராட்டங்களையும் தலைமை தாங்கி முன்னெடுத்து வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# மட்டக்களப்பு வாவியில் வயோதிபரின் சடலம்!

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்பு வாவியின் குருமன்வெளி ஆற்றுப் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருமன்வெளி, 12 ஆம் வட்டாரம் பழைய தபால் நிலைய வீதியில் வசித்த 68 வயதான வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் சடலம் மிதப்பதை அவதானித்து, களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாட்டை நீக்க தீர்மானம்

கொழும்பு, செப். 23

சந்தையில் தற்போது நிலவும் பொருள்களின் பற்றாக்குறைக்கு நிரந்தர தீர்வை வழங்கத் தேவையான முடிவுகள் இன்று நடைபெறும் வாழ்க்கை செலவு குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் என்று பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நுகர்வோர் விவகார ஆணைய சட்ட திருத்த வரைவு மீதான விவாதத்தின்போது இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

தற்போது பால்மா உள்ளிட்ட அத்தியாவசியப் உணவுப் பொருள்களுக்கும் சிமெந்துக்கும் தட்டுப்பாடு இருப்பதை ஒப்புக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

# விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றல் நாளை முதல் ஆரம்பம்

கொழும்பு, செப். 23

12 வயதுக்கு மேற்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் நாளை சிறுவர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

தலசீமியா உள்ளிட்ட ஏனைய நோய்களுக்குள்ளான சிறுவர்களுக்கு அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் நாளைமறுதினம் சனிக்கிழமை பைசர் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியிலுள்ள தெரிவு செய்யப்பட்ட ஏனைய வைத்தியசாலைகளில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மேலும் குறிப்பிட்டார்.

12 வயது தொடக்கம் 19 வயதுக்கு இடைப்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களுக்கே பைசர் தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர்: உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்: டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-வேட்டைக்காரன்,அசல் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-டிக்கிலோனா

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் ஸ்ரீ

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்